பக்கங்கள்: 09

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 ஆவணி 21 வியாழக்கிழமை 07.09.2023 கதிர் 300

# 13ஐ அமுல்படுத்தும் ரணிலின் முயற்சிகளுக்கு ஐ.நா. வரவேற்பு

## அதேநேரம் பொறுப்புக்கூறல் முக்கியம் என்றும் இடித்துரைப்பு

அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தும் ஜனாதிபதி ரணிலின் முயற்சிக்கு ஐ.நா. மனித உரிமைகள் உயர் ஆணையர் வரவேற்புத் தெரிவித்துள்ளார். அதேநேரம் பொறுப்புக்கூல் மிக முக்கியம் என்றும் தெரிவித்துள்ளார்.

போர் முடிவடைந்து 14 வருடங்கள் கடந்துள்ள போதிலும், அதனால் பாதிக்கப்பட்ட ஆயிரக்கணக்கான குடும்பங்கள் நீதி, நியாயம், உண்மை என்பன நிறைவேற்றப்படாமல் வேதனையுடன் வாழ்ந்து வருகின்றன என்று ஐ.நா.மனித உரிகைள் உயர் ஆணையரின் இந்த வாய்மூல அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 54ஆவது கூட்டத்தொடர் செப்டெம்பர் 11 தொடங்கி ஒக்டோபர் 6 வரையில் நடைபெறவுள்ள நிலையில், ☞ 2

# இது ரகசியம் அல்ல!



அரசுக்கும் அரசியல்வாதிகளுக்கும் பெரும் தலையிடியாக மாறியிருப்பது இணையப் பெருவெளி. அதிலும் எதிர்த் தரப்பில் இருக்கும்போது பெரும் வரப்பிரசாதமாகத் தெரியும் இந்த இணையப் பெருவெளி, முக்கிய சமூக ஊடகங்கள் ஆளும் தரப்புக்கு வந்த பின்னர் அரசியல்வாதிகளுக்கு - அதிகார வர்க்கத்தினருக்கு - முதன்மை எதிரியாக மாறிவிடுகின்றன.

அதனால் ஒவ்வொரு ஆட்சியிலும் இந்த இணையத் தளங்களைக் கட்டுப் படுத்துவதற்கான முயற்சிகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுகின்றன. இந்த ஆட்சியும் அதற்கு விதி விலக்கல்ல. இணையத் தளங்கள், சமூகவலைத்தளங்கள் தொடர்பில் புதிய சில கட்டுப்பாடுகளை அறிமுகப்படுத்த இந்த ஆட்சியாளர்களும் நடவடிக்கைகளில் இறங்கியிருக்கிறார்கள்.

ஆட்சியாளர்களையும் அவர்களின் சமூக விரோதப் போக்கையும் சகட்டு மேனிக்கு விமர்சிக்கும் கட்டடற்ற சுதந்திரம் இந்த இணையப் ☞ 2

# அவதானம்!

ஐக்கிய நாடுகள் சபையின் பெயர் மற்றும் இலச்சினையை பயன்படுத்தி பணம் மற்றும் தனிப்பட்ட தகவல்களை கோரி மோசடியில் ஈடுபடுபவர்கள் தொடர்பில் அவதானமாக இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கை அலுவலகம் விடுத்துள்ள அறிவிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

சமூக வலைத்தளங்கள், குறுஞ்செய்திகள், இணையத்தளங்கள், மின்னஞ்சல்கள் மற்றும் தொலைபேசி அழைப்புகள் மூலம் இவ்வாறு முறைகேடான நடவடிக்கைகளில் ஈடுபடுகிறது. இந்த நிலையில், பணம் மற்றும் தனிப்பட்ட தகவல்களை வழங்குவதனை தவிர்க்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

ஐக்கிய நாடுகள் சபை ஆட்சேர்ப்பு ☞ 2

# புலம்பெயர் தொழிலாளர்களுக்காக தேசிய புதிய கொள்கை உருவாக்கம்

## அமைச்சரவை அனுமதிக்காகச்

வெளிநாட்டிலிருக்கும் இலங்கைத் தொழிலாளர்களின் பாதுகாப்புக்கென, தேசிய வெளிநாட்டு வேலை வாய்ப்பு கொள்கை ஒன்றைத் தயாரித்து, அதனை அமைச்சரவை அனுமதிக்காக சமர்ப்பித்துள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சர் ஜகத் புஷ்பகுமார தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

வெளிநாட்டு வேலை வாய்ப்பு ஊடாகவே நாட்டிற்கு அதிக வருமானம் கிடைக்கின்றது. இலங்கை மத்திய வங்கி 2023ஆம் ஆண்டு ஜூன் மாதம் வெளியிட்ட அறிக்கையின்படி 2022ஆம் ஆண்டில் பெற்றுக்கொள்ளப்பட்ட 1,610 மில்லியன் டொலர் வருமானத்திற்கு மேலதிகமாக 2023 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாத ☞ 2

# பௌத்தர் ஒருவரைத் தலைவராக்க முஸ்லிம்கள் உயிர் விடுவது புதுமை

## பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

சிங்கள பௌத்த தலைவர் ஒருவரை உருவாக்குவதற்காக ஒருகற்பிணிப்பெண் உள்ளடங்களாக 9 இஸ்லாமியர்கள் தற்கொலை செய்துகொண்ட விடயம்தான் இங்கு புதுமையாக உள்ளது. இந்த விடயம் இலங்கையிலும் ஹிந்தி திரைப்படங்களிலிருந்து தான் நிகழ முடியும் என்று என்று பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னக்கோன் தெரிவித்துள்ளர்.

நாடாளுமன்றத்தில் நேற்றையதினம் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவின் வினாவைத் தொடர்ந்து, சனல்-4 தொலைக்காட்சி காணொளி தொடர்பில் கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

2019ஆம் ஆண்டு ஏப்ரல் 20 ஆம் திகதி கல்கிசை ஸ்பான் டவரில் இருந்து தற்கொலையாளிகள் காணொளியொன்றை வெளியிட்டுள்ளார்கள். அந்தக் காணொளி சிங்கள மொழியிலும் தமிழ் மொழியிலும் காணப்படுகிறது. ஐஎஸ் அமைப்புக்கு பையத் எனப்படும் உறுதிமொழியை வழங்கி இஸ்லாமிய இராஜ்யத்தை உருவாக்குவதற்காக தங்களை தியாகம் ☞ 2

# லசந்தவைக் கொன்றவர்கள் நாடாளுமன்றில் உள்ளனரா?

## எதிர்க்கட்சித் தலைவர் நேற்றுக் கேள்வி

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அரசியல் பயணத்துக்கு பெரும் உதவிகளை வழங்கிய ஊடகவியலாளர் லசந்த விக்ரமதுங்கவை கொலை செய்தவர்கள் இந்த சபையில் இருக்கின்றரா?. என்று சஜித் பிரேமதாச மீண்டும் மீண்டும் கேள்வி எழுப்பினார்.

நாடாளுமன்றத்தில் நேற்றையதினம் விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றியபோது, ஆளும் தரப்பினர் தொடர்ச்சியாக குழப்பங்களை விளைவித்த நிலையிலும், சபாநாயகர் விடயதானத்தினை மட்டும் பேசும் படியும் அறிவுறுத்திய தருணத்தில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்க தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அரசியல் பயணத்திற்கு பெரும் பலமாக இருந்தவர். அவ்வாறான நிலையில் ஜனாதிபதி உட்பட இந்த ஆட்சி லசந்த விக்கிரமதுங்கவின் கொலை தொடர்பானவிசாரணைகளை நடத்தாதா?

எனது வாயை மூட வர வேண்டாம். எனது வாயை மூட முடியாது. பல்வேறு ஆயுதக்குழுக்களுக்கு நான் அஞ்சவில்லை. இறக்கவும் தயாராக இருக்கின்றேன். பிரித்தானியாவின் செனல் 4 தொலைக்காட்சி நேற்றிரவு வெளியிட்ட இலங்கையில் நடந்த ஈஸ்டர் ஞாயிறு குண்டுதாக்குதல் தொடர்பான ஆவணப்படுத்தில், லசந்த விக்ரமதுங்கவை, கொழும்பு திரிபோலி இராணுவமுகாமில் இயங்கிவந்த ஆயுதக்குழுவே கொலை செய்ததாக ☞ 2

# வாகன இறக்குமதித் தடை நீக்கம் என்பது முழுப்பொய்

## நிதி இராஜாங்க அமைச்சர் அறிவிப்பு

தனியார் வாகனங்கள் இறக்குமதிக்கு விதிக்கப் பட்டுள்ள தடையை நீக்குவதற்கு எவ்வித தீர்மானமும் எடுக்கப்படவில்லையென நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

அவிசாவளை பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகவியலாளர்கள் ☞ 2

# ஐமசு முன்னணி செயலர் நானே என்கிறார் அமரவீர

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சட்டரீதியான பொதுச்செயலாளராக தற்போதும் நானே உள்ளேன். இந்த விடயம் சம்பந்தமாக தொடரப்பட்டுள்ள வழக்கின் தீர்ப்பில் சட்ட ரீதியான பொதுச்செயலாளர் யார் என்பதை நீதிமன்றம் தீர்மானிக்கும் என்று கமத்தொழில் அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

கமத்தொழில் அமைச்சில் நேற்று நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் எழுப்பபட்ட கேள்விக்கு பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போதும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சட்ட ரீதியான பொதுச்செயலாளராக நானே உள்ளேன். சிலர் பொதுச்செயலாளர் ☞ 2

# ஏபிஐ ஏசியா தொழில்நுட்ப மாநாடு நவ. 16 கொழும்பில் நடைபெறும்

டிஜிட்டல் பொருளாதாரத்தின் முக்கியமான மூன்று தூண்களாகக் கருதப்படும் செயற்கை நுண்ணறிவு, ஸ்மார்ட் நகரம் மற்றும் நிதித் தொழில்நுட்பம் தொடர்பான "ஏபிஐ ஏசியா (API Asia) தொழில்நுட்ப மாநாடு– 2023" நவம்பர் 16 கொழும்பு ஷங்ரீலா ஹோட்டலில் நடைபெறவுள்ளது. இதற்கான ஏற்பாடுகள் முழுமை பெற்றுள்ளதாக தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத் தெரிவித்தார்.

'டிஜிட்டல் பொருளாதாரத்திற்கு வலுவூட்டல்' என்ற தொனிப்பொருளின் கீழ் 500க்கும் அதிகமானவர்களின் பங்கேற்புடன் நடத்தப் படவுள்ள இந்த மாநாடு இலங்கை தகவல் தொழில்நுட்ப தொழிற்துறை சம்மேளனத்தினால் இந்நாட்டில் இரண்டாவது முறையாக ஏற்பாட்டு செய்யப்படுவதாகவும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

அதேபோல் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் டிஜிகோன் சிறீலங்கா (DIGIECON Sri Lanka) 2023 -2030' நிகழ்ச்சித்திட்டத்திற்கு இணையாக மேற்படி மாநாடும் நடத்தப்படவுள்ளமை சிறப்பம்சமாகும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

''ஏபிஐ ஏசியா தொழில்நுட்ப மாநாடு ☞ 2

# புதிய கல்வி முறைத் தயாரிப்பு பணிகளை தொடங்கியது அரசு

21ஆம் நூற்றாண்டுக்குப் பொருத்தமான புதிய கல்வி முறையைத் தயாரிப்பதற்கான பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. இதற்காக வெளிநாடுகள், துறைசார் நிபுணர்கள், மாணவர் நாடாளுமன்றம் ஆகிய தரப்புக்களின் ஆலோசனைகளும் பெறப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இரத்தினபுரி சீவலி மத்திய கல்லூரியின் மாணவர் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் செவ்வாய்க்கிழமை ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற சந்திப்பிலேயே ஜனாதிபதி ரணில்விக்ரமசிங்க இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

எதிர்காலத்தில் குறைந்தபட்சம் 10 பல்கலைக்கழகங்களை யாவது நாட்டில் உருவாக்க எதிர்பார்த்துள்ளேன். ☞ 2

# பேராதனை பல்கலைக மாணவர் போட்டம் மீது நீர்த்தாரை தாக்கு

## ஆர்ப்பாட்டத்தை தடுக்கப் பொலிஸார் பிரயத்தனம்

பேராதனை பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தினால் முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தை கலைப்பதற்கு பொலிஸார் கண்ணீர் புகைக்குண்டுகளை பிரயோகித்துள்ளனர்.

கொழும்பு கண்டி பிரதான வீதியில் பேராதனை பிரதேசத்தில் ஆர்ப்பாட்ட பேரணியில் ஈடுபட்ட மாணவர்களை பொலிஸார் பலத்தைப் பயன்படுத்தியது.

நாட்டின் இலவசக் கல்வி முறையை அழிக்கும் 'பல்கலைக்கழகமானியங்கள் ஆணைக்குழுவை ஒழிக்க வேண்டும்', 'மருத்துவப் பட்டங்களைவிற்கவேண்டும்' என்று கூறப்படும் இந்த ஆட்சியின் சதிகளுக்கு எதிராகவும் மேலும் பல முக்கிய கோரிக்கைகளை முன்வைத்தும் இந்தப் போராட்டம் நடத்தப்பட்டது.

போராட்டக்காரர்களால் போக்குவரத்துக்கு ஏற்பட்ட இடையூறு காரணமாக பொலிஸார் கண்ணீர் புகைப்பிரயோகம் மேற்கொண்டு கலைத்தமை குறிப்பிடத்தக்கது. ☞ 8

# வர்த்தக, கைத்தொழில் மயமாக்கல் மூலம் 15 – 20 வருடங்களில் துரிதமான வளர்ச்சி

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

பியகம சுதந்திர வர்த்தக வலயத்தை முன்னுதாரணமாகக்கொண்டு நாடு முழுவதும் நவீன வர்த்தக கைத்தொழில்மயமாக்கல் முயற்சிகளின் ஊடாக அடுத்த 15-20 வருடங்களில் நாட்டை துரித அபிவிருத்திக்கு இட்டுச் செல்லும் வேலைத்திட்டம் தொடங்கப்படுமென ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

மல்வானை அல் முபாரக் மத்திய கல்லூரியின் நூற்றாண்டு விழா நிகழ்வில் நேற்றையதினம் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

பிங்கிரிய, ஹம்பாந்தோட்டை, கண்டி, திருகோணமலை மற்றும் வடமாகாணத்தில் கைத்தொழில் பேட்டைகளை அமைப்பதற் கான பல பகுதிகள் ஏற்கனவே அடையாளம் காணப்பட்டுள்ளன. அதற்கான பணிகள் துரிதப்படுத்தப்பட்டு அந்தப் பகுதிகள் அனைத்தும் வர்த்தக நகரங்களாகக் கட்டமைக்கப்படும்.

ஒவ்வொரு மாவட்டத்தினதும் அபிவிருத்திக்காக முதலீட்டு ☞ 8

## இனி இது .....

பெருவெளியில் கிடைப்பதால் அரசியல்வாதிகளுக்கு அது அச்சத்தை ஏற்படுத்துகின்றது. அதனைக் கட்டுப்படுத்தி தங்கள் பிடியில் வைத்திருக்கவேண்டும் என்கிற ஆவேசத்தையும் ஏற்படுத்துகின்றது.

இணையப்பெருவெளியின் இந்தக் கட்டடற்ற சுதந்திரம் அப்பாவிகளையும் அதிகளவில் பாதிக்கின்றது என்பது உண்மை. இவற்றினால் பலர் மிக மோசமான விளைவுகளுக்கு உள்ளாகியிருக்கிறார்கள். கட்டுப்பாடற்ற அவதூறுகள் இவற்றின் ஊடாகப் பரப்பப்படுகின்றன. வதந்திகள், உண்மைக்குப் புறம்பான செய்திகள் மற்றும் தகவல்கள், ஒருவரின் மதிப்பைப் பந்தாடும் ஆதாரமற்ற தகவல்கள் என்பன சமூக ஊடகங்களிலும் இணையத்திலும் சாதாரண மக்களுக்குப் பெரும் அச்சுறுத்தலாக மாறியிருக்கின்றன என்பதும் உண்மைதான். இணையங்கள் பல தற்கொலைகளுக்குக் காரணமாகி இருக்கின்றன என்கிற உண்மையையும் மறுக்க முடியாது. அதனால் அவற்றை ஒரு ஒழுங்கு முறைக்குள் கொண்டு வரவேண்டியது அவசியம், தேவைப்பாடு உண்டு என்பதையும் மறுப்பதற்கில்லை.

ஆனால், அத்தகைய கட்டுப்பாடுகள் சமூகத்தில் சாதாரண மக்களைப் பாதுகாப்பதற்குப் பதில் அரசியல்வாதிகளையும் அதிகார வர்க்கத்தினரையும் பாதுகாப்பதற்கு மட்டுமே பயன்படுத்தப்படும் என்பதுதான் இலங்கையில் நடைமுறை யதார்த்தம். அத்தோடு பௌத்த, சிங்கள மனோபாவத்தில் இத்தகைய கட்டுப்பாடுகள் தமிழ், முஸ்லிம் மக்களுக்கு எதிராக ஒருவகையிலும் சிங்களவர்களுக்கு ஒருவகையிலும் அமுல்படுத்தப்படும் என்பது எதிர்வுகூறாமலே உணரக்கூடிய உண்மை. பௌத்தத்தை நிந்தனை செய்தார்கள் என்று போதகர் ஜெரோமுக்கு எதிராகவும் பிக்குகள் சிலருக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்கப்பட்டபோதும், தமிழர்களின் தலைகளைக் கொய்வேன் என்று கூறிய மேர்வின் சில்வா மீது எந்தவித நடவடிக்கையும் எடுக்காத, முறைப்பாடு செய்யப்பட்ட போதும் எந்த நடவடிக்கையும் எடுக்காத பாரபட்சம் நிறைந்த நாட்டில் இணையங்களைக் கட்டுப்படுத்தும் விதிகளும் இவ்வாறே பயன்படுத்தப்படும் என்பதும் சொல்லித் தெரிய வேண்டிய விடயமில்லை.

இவ்வளவையும் ஏன் சொல்லவேண்டியிருக்கின்றது என்றால், இணையவழி அமைப்புகளின் பாதுகாப்பு தொடர்பான சட்டமூலத்தை வர்த்தமானி மூலம் பிரசுரித்து நாடாளுமன்றத்தின் ஒப்புதலுக்காக சமர்ப்பிப்பதற்கு பொது பாதுகாப்பு அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இணையம் ஊடாகப் பரப்பப்படும் தவறான தகவல்களாலும், தீங்கிழைக்கும் சூழ்ச்சிகளாலும் ஏற்படும் பாதிப்புகளில் இருந்து பொதுச் சமூகத்தைப் பாதுகாக்கும் நோக்கில் இந்த சட்டமூலம் தயாரிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. ஆனால், உண்மை என்னவென்றால் அரசியல்வாதிகளையும் அதிகார வர்க்கத்தினரையும் பாதுகாப்பதற்குத்தான் இவை பயன்படுத்தப்படும் என்பதே.

சட்டமா அதிபரின் அனுமதியைப் பெற்றுள்ள மேற்படி தீர்மான வரைவின் பகுதி III இல் காட்டப்பட்டுள்ள விவரங்களை வாசகர்களின் கவனத்திற்குத் தருகின்றேன். இது நாடாளுமன்றத்தில் சட்டமாகினால் சமூக வலைத்தளங்களிலும் இணையங்களிலும் நீங்கள் வெளியிடும் கருத்துக்கள், தகவல்கள், செய்திகள் குறித்து மிக அவதானமாக இருக்கவேண்டியிருக்கும். புலிகள் தொடர்பான படங்கள், செய்திகளுக்காக சிறை செல்ல நேரிடுவதைப் போல இனிவரும் காலங்களில் அரசியல்வாதிகள், அதிகாரிகள் பற்றிய விமர்சினங்களுக்காகவும் கருத்துக்களுக்காகவும் சிறைசெல்ல வேண்டிய ஏற்படலாம்.

புதிய விதிகள் வருமாறு,

* இலங்கையில் நடந்த சம்பவங்கள் குறித்து பொய்யான அறிக்கைகளைப் பரப்புவது.

* அவதூறான பொய்யான அறிக்கைகளை வெளியிடுதல்.

* பொய்யான அறிக்கை மூலம் சுதந்திரமாக கலகத்தைத் தூண்டுதல்.

* மதக் கூட்டங்களை பொய்யான அறிக்கையால் தொந்தரவு செய்தல்.

* மத உணர்வுகளைப் புண்படுத்தும் நோக்கத்துடன் தவறான அறிக்கையைப் பரப்புவது.

* மத உணர்வுகளைப் புண்படுத்தும் வகையில் அப்பட்டமான மற்றும் தீங்கிழைக்கும் தவறான அறிக்கையைப் பரப்புவது.

* மோசடி.

* ஆள்மாறாட்டம் மூலம் மோசடி.

* சமாதானத்தை சீர்குலைக்கும் நோக்கத்துடன் தவறான அறிக்கையை வெளியிட்டுவேண்டுமென்றே அவதூறு செய்தல்.

* அரசுக்கு எதிராக கிளர்ச்சி அல்லது குற்றத்தை ஏற்படுத்தும் நோக்கத்துடன் தவறான அறிக்கையை பரப்புதல்.

* துன்புறுத்தல்களை பரவலாக்கும் வகையிலான சம்பவங்கள் குறித்த தகவல்களைப் பரப்புவது.

* சிறுவர் துஷ்பிரயோகம்.

* குற்றங்களில் ஈடுபடுவதற்காகமென்பொருள் இயந்திரசாதனங்களை உருவாக்குவது அல்லது மாற்றங்களைச் செய்வதும் இதில் அடங்கும்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## 13ஐ ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையில் மனித உரிமைகள் நிலை தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் வோல்கர் ட்ரக்கினால் வெளியிடப்பட்டுள்ள முற்கூட்டிய அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள முக்கிய விடயங்கள் வருமாறு,

இலங்கை இன்னமும் கடினமான பொருளாதார, சமூக மற்றும் அரசியல் நிலைமையை எதிர்கொண்டுள்ளது. இலங்கையர்கள் பலரின் உரிமைகள் மற்றும் வாழ்வில் பொருளாதார நெருக்கடி தொடர்ந்தும் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தி வருகிறது.

சர்வதேச நிதி நிறுவனங்களின் நிதி ஆதரவு மற்றும் கட்டமைப்பு சீர்திருத்தங்கள் பொருளாதார நெருக்கடியை கட்டுக்குள் கொண்டு வருவதற்கு முக்கியமான படிகளாக உள்ளபோதும், சமூகத்தின் சில பிரிவுகளின் மீது மட்டும் சீர்திருத்தங்களின் சுமை நெருக்கடியை ஏற்படுத்தாது இருப்பது அவசியமாகும்.

பொருளாதார மறுசீரமைப்பின் எதிர்மறையான விளைவுகளில் இருந்து மிகவும் பாதிக்கப்படக் கூடியவர்களை பாதுகாக்க வலுவான சமூக பாதுகாப்பு தேவையாகும்.

நெருக்கடியின் அடிப்படைக் காரணிகளான ஊழல், அதிகாரத்தை மையப்படுத்துதல், வெளிப்படைத்தன்மை இல்லாமை, சமநிலைகள் இல்லாமை, பொறுப்புக்கூறல் உட்பட தீர்க்கப்படாத விடயங்கள் பலவற்றைக் கையாள்வது இன்றியமையாதது.

நிர்வாகம், வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறல் ஆகியவற்றில் உண்மையான முன்னேற்றத்திற்கு அழுத்தம் கொடுக்கும் அதேவேளையில், சர்வதேச ஒத்துழைப்பு மற்றும் உதவி தொடர்பான கடப்பாடுகளுக்கு இணங்க, இலங்கையை மீட்டெடுப்பதில் சர்வதேச சமூகத்தை ஆதரிக்குமாறு உயர்ஸ்தானிகர் கேட்டுக் கொள்கிறார்.

ஒட்டுமொத்த சமூகமும் ஆதரவளித்தால் மட்டுமே நீண்டகாலம் நீடிக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வினைப் பெற்றுக்கொள்ள முடியும். அனைத்து நிலைகளிலும் பொறுப்புக்கூறல் இல்லாமையே அடிப்படை மனித உரிமைப் பிரச்சினையாக உள்ளது. இது போர்க்குற்ற அட்டூழியங்கள், போருக்குப் பிந்தைய சித்திரவதைகள் மற்றும் பொலிஸ் காவல் இறப்புக்கள், ஊழல் மற்றும் அதிகார துஷ்பிரயோகம் போன்றவற்றைக் நீடிக்கின்றன.

பொறுப்புக்கூறல், நல்லிணக்கம் மற்றும் மனித உரிமைகள் தொடர்பான நீண்டகால விடயத்தில் ஆழமான நிறுவன சீர்திருத்தங்கள் மற்றும் உறுதியான முன்னேற்றம் ஆகியவற்றிற்காக அர்ப்பணிப்புடன் செயற்படவும், அரசு மற்றும் இலங்கை அரசியல் கட்சிகளை உயர்ஸ்தானிகர் கேட்டுக்கொள்கிறார்.

இலங்கையின் சுதந்திரத்தின் 75ஆவது ஆண்டு நிறைவையும், மனித உரிமைகள் தொடர்பான உலகளாவிய பிரகடனத்தின் 75ஆவது ஆண்டு நிறைவையும் குறிக்கும் ஒரு வருடத்தில் இது மிகவும் முக்கியமானதும், பொருத்தமானதும் ஆகும்.

1983இல் கொழும்பில் நடந்த 'கறுப்பு ஜூலையின் நிகழ்வானது, பல நூற்றுக்கணக்கானவர்களைக் கொலைசெய்து, ஆயிரக்கணக்கானோரை வீடற்றவர்களாக ஆக்கி, இனப்பிளவை அதிவேகமாகப் பெரிதுபடுத்தி, மூன்று தசாப்தங்களாக ஆயுத மோதலுக்கு வழிவகுத்தது. அதன் 40ஆவது நினைவுதினத்தில் குழப்பங்கள் ஏற்படுத்தப்பட்டது கவலைக்குரியது.

ஆகவே, தமிழ் அரசியல் கட்சிகள் மற்றும் புலம்பெயர் குழுக்களுடன் உரையாடல் மற்றும் 13ஆவது திருத்தத்தில் முன்வைக்கப்பட்ட அதிகாரப் பகிர்வு, ஏனைய அரசியல் தீர்வுகளின் ஊடாக நல்லிணக்க விருப்பங்களை முன்னெடுக்கும் ஜனாதிபதியின் நோக்கத்தை ஐ.நா.மனித உரிமைகள் பேரவை வரவேற்கிறது.

எவ்வாறாயினும், எந்தவொரு உண்மையான நல்லிணக்க நிகழ்ச்சி நிரலிலும் பொறுப்புக்கூறல் முக்கியமானதொரு அங்கமாக உள்ளது. உண்மையைக்கண்டறியும் ஆணைக்குழு உட்பட எந்தவொரு புதிய இடைக்கால நீதி நடவடிக்கைகளும் சர்வதேச தரங்களையும் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்களது உறவினர்களின் எதிர்பார்ப்புகளையும் பூர்த்தி செய்ய வேண்டும்.

கடந்த கால மீறல்களை ஏற்றுக்கொண்டு, நம்பகமான விசாரணைகள் மேற்கொள்ளுதல், வழக்குத் தாக்கல் செய்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்தல், என்பன இலங்கை அதிகாரிகளின் பொறுப்பாக இருக்கும் அதேவேளையில், சர்வதேசசமூகம், குற்றவியல் நீதி விசாரணைகள் மற்றும் வழக்குகளை ஆதரிப்பதன் மூலம், உலகளாவிய அதிகார வரம்பைப் பயன்படுத்துதல் மற்றும் பரிசீலித்தல் உட்பட ஒரு முக்கிய வகிபாகத்தை கொள்ளமுடியும். கடுமையான மனித உரிமை மீறல்களில் நம்பத்தகுந்த வகையில் சம்பந்தப்பட்ட நபர்களுக்கு எதிராக பொருத்தமான இலக்குத்தடைகள் அவற்றுக்கு முன்னுதாரணமாகின்றது.

இதனைவிடவும், உத்தேச ஒளிபரப்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு சட்டமூலம், சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் மீதான சர்வதேச கொள்கைக்கு முரணானதாக உள்ளதோடு அது சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச சாசனத்தின் 19-3 பிரிவு மூலம் உத்தரவாதம் அளிக்கப்பட்ட கருத்துச் சுதந்திரத்தின் மீது தேவையற்ற கட்டுப்பாடுகளை விதிக்கின்றது,

ஒரு வருடத்திற்கு முன்னர் இடம்பெற்ற பெரும் மக்கள் போராட்டங்களை கருத்தில் கொண்டு, வரலாற்று மாற்றத்தின் சவால்களை யதார்த்தமாக்குவதற்கு அர்ப்பணிக்க வேண்டியது கட்டாயமாம்.

உண்மையைக் கண்டறியும் பொறிமுறையொன்று அரசாங்கத்தினால் முன்மொழியப்பட்டுள்ள நிலையில், அவ்வாறானதொரு பொறிமுறைக்காக உண்மையான பின்னணியை தயார் செய்ய வேண்டியுள்ளது,

2019 உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக சர்வதேச ஆதரவுடன் சுதந்திரமான விசாரணை நடத்தப்படவேண்டும் - ஆகிய விடயங்கள் உள்ளடங்குகின்றன.

## புலம்பெயர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காலப்பகுதியில் 2,823 மில்லியன் டொலர்களை வெளிநாட்டு வேலைகள் மூலமாக ஈட்டியுள்ளோம்.

கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் அது 75 சதவீத வளர்ச்சியாகும். இவ்வருடத்தின் இறுதியில் 6500 மில்லியன் டொலர்களை வருமானமாகப் பெற்றுக்கொள்ள முடியும். ஜனாதிபதியால் வழங்கப்பட்ட இலக்கான 7000 மில்லியன் டொலர் வருடாந்த வெளிநாட்டு வருமானம் என்ற இலக்கை இவ்வருட இறுதிக்குள் அடைந்துவிட முடியும்.

அதேபோல் இவ்வருட இறுதிக்குள் நியூசிலாந்து, சிங்கப்பூர், மோல்டா இராச்சியம், துருக்கி, லக்சம்பர்க், சைப்பிரஸ், பிலிப்பைன்ஸ், ருமேனியா, மலேசியா, மாலைத்தீவு, லெபனன், குவைட், ஹோமான், கட்டார், இத்தாலி உள்ளிட்ட நாடுகளுடன் வெளிநாட்டு வேலைவாய்ப்பு தொடர்பான ஒப்பந்தங்கள் கைசாத்திடப்படவுள்ளன.

ஓகஸ்ட் மாதத்தில் இத்தாலிக்கு மேற்கொண்டிருந்த சுற்றுப் பயணத்தின் போது அந்நாட்டு தொழில் மற்றும் சமூக கொள்கை பிரதி அமைச்சர் மாரிய தெரேசா மெல்லைச் சந்திக்க முடிந்தது. இத்தாலி வேலைவாய்ப்புக்காகச் செல்வோருக்கு 6 மாதகால அடிப்படை தொழில்ப் பயிற்சியை வழங்க வேண்டுமென அவர் கேட்டுக்கொண்டார்.

அதற்கு மேலதிகமாக ஆறு மாதகால செயன்முறை பயிற்சிக் காலத்தையும் ஒரு வருட பயிற்சிக்காலத்தையும் பெற்றுத்தருமாறு கோரிக்கை விடுத்துள்ளேன். அது தொடர்பில் ஆராய்வதாக அவர் உறுதியளித்துள்ளார்.

மறுமுனையில் மலேசியாவின் பாதுகாப்பு பணிகளுக்கான முன்னோடித் திட்டமாக 10 ஆயிரம் இலங்கையர்களை இணைத்துக்கொள்ள இணக்கம் தெரிவித்துள்ளதோடு அதனை எதிர்காலத்தில் ஒரு இலட்சமாக அதிகரித்துக்கொள்ள முடியும் என எதிர்பார்க்கிறோம்.

அதேபோல் 1985 ஆம் ஆண்டு வெளிநாட்டு வேலையாய்ப்புச் சட்டத்தில் திருத்தம் செய்வதற்கான அமைச்சரவை அனுமதி தற்போது கிடைக்கப்பட்டுள்ளது. வெளிநாட்டு வேலைவாய்ப்பு தொடர்பிலான குற்றச்செயல்களைத் தடுப்பதற்கான சட்டத்தை மேலும் பலப்படுத்த எதிர்பார்த்துள்ளதுடன், வெளிநாட்டு முகவர் நிலையங்களுக்கான அனுமதி வழங்கும் பொறிமுறையை சீரான முறையில் முன்னெடுக்கவும் எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

மேலும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் பதிவுசெய்து வெளிநாடுகளுக்குச் செல்வோரின் குடும்பங்களுக்கு ஓய்வூதியம் ஒன்றை வழங்கும் திட்டம் மற்றும் அவர்களின் குடும்பத்தினருக்கான வலுவூட்டல் திட்டங்கள் ஆகியவற்றையும் நடைமுறைப்படுத்த எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

அத்தோடு வெளிநாட்டு வேலைவாய்ப்பு தொடர்பிலான தேசிய கொள்கை ஒன்றைத் தயாரிக்கவும் எதிர்பார்க்கப்பட்டுள்ளதோடு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்புத் திட்டங்களை யாழ்ப்பாணத்திலும் முன்னெடுத்துள்ளோம்.

மேலும், 2 இலட்சத்துக்கும் அதிகமானவர்கள் வெளிநாட்டு வேலைகளுக்காக சென்றுள்ளனர். அவர்களில் 74 சதவீதமானவர்கள் மத்திய கிழக்கு நாடுகளுக்கே சென்றுள்ளனர்.

கடந்தகாலங்களில் வெளிநாட்டு வருமானம் போதாமல் இலங்கை மிகப்பெரிய நெருக்கடிக்குள் சிக்கியிருந்த நிலையில், நாட்டைப் பொறுப்பேற்றுக் கொண்ட ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் வழங்கப்பட்ட பொறுப்புக்களை இயன்ற வகையில் நிறைவேற்றி வருகிறேன் - என்றார்.

## வாகன....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அந்நிய செலாவணி சட்டம் மற்றும் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டு சட்டத்தில் திருத்தங்கள் இன்று (நேற்று) நாடாளுமன்றத்தில் மேற்கொள்ளப்பட்டது.

நாட்டில் ஏற்பட்டுள்ள பணப்பரிவர்த்தனை நெருக்கடியுடன் வெளிநாடு செல்வதற்கு பல கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளது, இதன் காரணமாக பல்வேறு தரப்பினர் சில பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

அதன்படி, கடந்த ஜூன் 20 வெளியிடப்பட்ட வர்த்தமானி மூலம் விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள் ஓரளவு தளர்த்தப்பட்ட நிலையில் அந்தத் தளர்வு இன்று (நேற்று) நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

பணப்பரிவர்த்தனை நெருக்கடி காரணமாக சுமார் 4000 வகையான பொருட்களுக்கு இறக்குமதி கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டதுடன் ஜூன் 20 ஏனைய 327 வகையான பொருட்களுக்கான இறக்குமதிக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டது.

இதேவேளை, இறக்குமதி கட்டுப்பாடுகள் தளர்த்தப்படுவது குறித்து நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டு, இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டுச் சட்டத்தில் திருத்தங்கள் கொண்டு வரப்பட்டது.

பரிமாற்றத்துக்காக செய்யப்பட்ட தளர்வு 06 மாத காலத்திற்கு வழங்கப்பட்டுள்ள நிலையில் எதிர்வரும் டிசம்பர் மாதம் அது மீளாய்வு செய்யப்பட்டு தளர்வு மேலும் அமுல்படுத்தப்படுவதா? அல்லது தளர்வு நிறுத்தப்படுவதா? என்பது குறித்து தீர்மானிக்கப்படும்.

எவ்வாறாயினும், இறக்குமதிக்கு தடை விதிக்கப்பட்டுள்ள 578 வகையான பொருட்களில் 299 வாகனங்கள், எஞ்சிய 279 ஆடம்பரப் பொருட்கள் உட்பட பல்வேறு வகையான பொருட்கள் உள்ளடக்கியுள்ளன. தனியார் வாகனங்கள் மீதான இறக்குமதிக் கட்டுப்பாடுகள் நீக்கப்படுவது குறித்த வதந்திகள் அனைத்தும் ஆதாரமற்றது - என்றார்.

## லசந்தவைக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்திருந்தது.

அந்த ஆயுதக்குழு முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் தேசிய புலனாய்வு சேவையின் பணிப்பாளர் சுரேஷ் சாலே ஆகியோரின் நேரடி கட்டுப்பாட்டில் இயங்கியதாகவும் அதில் கூறப்பட்டது.

மிக் விமான கொள்வனவில் நடந்த நிதி மோசடிகள், போரில் நடக்கும் தவறுகள் உட்பட அன்றைய அரசாங்கத்தின் செயற்பாடுகள் தொடர்பாக லசந்த விக்ரமதுங்க தனது பத்திரிகையில் செய்திகளை வெளியிட்டு வந்தார். இதனாலேயே அவரது உயிருக்கு ஆபத்து ஏற்பட்டதாக கூறப்பட்டுள்ளது -என்றார்.

## அவதானம்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செயன்முறையின் போது எந்தவொரு சந்தர்ப்பத்திலும் கட்டணம் அறவிடுவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது என்றுள்ளது.

## ஏபிஜ ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

- 2023= தொடர்பில் தெளிவுபடுத்தும் முகமாக நேற்று ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

'ஏபிஜ ஏசியா மாநாடு - 2023' இணையத்தளத்தை அங்குரார்ப்பணம் செய்யும் நிகழ்வும் இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத் தலைமையில் நடைபெற்றது.

இலங்கையை டிஜிட்டல் பொருளாதாரத்தை நோக்கி இட்டுச்செல்லும் வேலைத் திட்டங்களுக்கு இந்த மாநாட்டின் பங்களிப்பு எவ்வாறானதாக அமையும் என்பது தொடர்பில் விளக்கமளித்த இராஜாங்க அமைச்சர், டிஜிட்டல் முறைமை மாற்றத்தின் கீழ் போட்டித் தன்மை நிறைந்த சந்தைக்குள் பிரவேசிப்பதற்கான வாய்ப்புக்களை அதிகரித்துக் கொள்வதோடு அரச மற்றும் தனியார் துறையினரின் தகவல் தொழில்நுட்ப தெரிவுகளை மேலும் பலப்படுத்த எதிர்பார்த்துள்ளதாகவும் தெரிவித்தார்.

இந்தச் செய்தியாளர்கள் சந்திப்பில் மேலும் கருத்து தெரிவித்த இலங்கை தகவல் தொழில்நுட்ப தொழிற்துறை சம்மேளனத்தின் தலைவர் இந்திக்க டி சொய்சா,

தொழில்நுட்ப ஒருங்கிணைப்பு, நிதி முகாமைத்துவம் மற்றும் நிலையான அபிவிருத்தி ஆகியவற்றின் முக்கியத்துவத்தையும், நிதி முகாமைத்துவம் மற்றும் வளர்ச்சியை வலுவான முறையில் முகாமைத்துவம் செய்யும் போது நிறுவன நிர்வாகிகள் எதிர்கொள்ளும் சவால்கள் தொடர்பில் எடுத்துரைத்தார்.

பொருளாதார முன்னேற்றத்திற்கான உந்து சக்தியாக காணப்படும் புதிய முறைமைகள் மற்றும் API முறைமை பற்றிய விளக்கங்களை வழங்குவதாக மேற்படி மாநாடு அமைந்திருக்கும் எனவும் அமைச்சர் நம்பிக்கை தெரிவித்தார்.

## பௌத்தர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்வதற்கு அவர்கள் தயாராக இருப்பதாகத் தெரிவித்தார்கள்.

அவர்கள் வெளியிட்ட இரண்டு மொழியிலான காணொளியை நான் சபையில் சமர்ப்பிக்கின்றேன். இங்கு மிகவும் ஆச்சரியமான விடயம் ஒன்றுள்ளது. கொலைக்கும்பல் தங்களுடைய திட்டம் தொடர்பில் வெளியிட்ட காணொளியை எந்தவகையிலும் கவனத்தில் கொள்ளாது தாக்குதல் தொடர்பில் வேறு தரப்பினர் மீது குற்றஞ்சாட்டுவதற்கு எடுக்கப்படும் நடவடிக்கையையிட்டு நான் ஆச்சரியமடைகிறேன். சனல்-4 வீடியோ தொடர்பில் அமைச்சரவையில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

குறித்த விடயம் சம்பந்தமாக தகவல்கள் அறிந்தவர்கள் வெளிநாடுகளில் இருந்து நாட்டுக்கு வர முடியாது விட்டாலும் காணொளித் தொழில்நுட்பம் ஊடாக தகவல்களைப் பெறுவதற்கு குழுவொன்றை அமைத்துக்கொள்வதற்கு நாம் நடவடிக்கை எடுக்க தயாராக உள்ளோம்.

சிங்கள பௌத்த தலைவர் ஒருவரை உருவாக்குவதற்காக ஒரு கற்பிணிப் பெண் உள்ளடங்களாக 9 இஸ்லாமியர்கள் தற்கொலை செய்துகொண்ட விடயம்தான் இங்கு புதுமையாக உள்ளது. இந்த விடயம் இலங்கையிலும் ஹிந்தி திரைப்படங்களிலிருந்து தான் நிகழ முடியும்.

முன்னாள் சட்டமா அதிபரும் தாக்குதல் தொடர்பான விடயம் சம்பந்தமாக கருத்துக்களை வெளியிட்டு இருக்கிறார். ஆனால் தற்பொழுது அவர் நீதிமன்றத்துக்குள் ஒழிந்து கொள்ளப் பார்க்கிறார் தெரிவுக்குழு ஒன்றை அமைத்து இந்த விடயம் சம்பந்தமாக அவரிடத்தில் தகவல்களை பெற்றுக்கொண்டு மேலதிக விசாரணைகளை முன்னெடுக்க முடியும் என்று நான் முன்மொழிகிறேன் - என்றார்.

## புதிய .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாணவர் கடன் திட்டங்களின் ஊடாக இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற நாடுகளில் உள்ளதைப் போல உயர் கல்வியை பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்புக்களைப் பெற்றுக்கொடுக்க எதிர்பார்திருக்கின்றேன்.

மாணவர்கள் தமது எதிர்காலத்தைத் திட்டமிடுவதற்குத் தேவையான பாடங்களைத் தெரிவுசெய்வதற்கான வாய்ப்பு அந்த பல்கலைக்கழகங்களின் ஊடாக வழங்கப்படும். புதிய தொழில்நுட்ப கல்லூரிகளை நிறுவுதல் உட்பட கல்வித் துறையின் பல்வேறு சீர்த்திருத்தங்கள் தொடர்பிலும் ஆராயப்பட்டுகிறது.

பல்கலைக்கழக மாணவர் நாடாளுமன்றத்தின் செயற்பாடுகள் தொடர்பிலும் மாணவர்களிடத்தில் கருத்துகளைக் கேட்டறிந்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, சபாநாயகர், பிரதமர், எதிர்க்கட்சித்தலைவர் உள்ளிட்ட பதவிகளுக்கு ஆட்களைத் தெரிவுசெய்த பின்னர், அதன் முதல் கூட்டத்தை இந்நாட்டின் முதலாவது நாடாளுமன்றம் கூடியதற்போதைய ஜனாதிபதி அலுவலகத்தின் கேட்போர் கூடத்தில் நடத்துமாறும் கேட்டுக்கொண்டார்.

இரத்தினபுரி சீவலி மத்திய கல்லூரியின் மாணவர் நாடாளுமன்றத்தின் முன்னாள் பிரதிநிதிகளான மாணவர் குழுவொன்றும் இச்சந்திப்பில் கலந்துகொண்டதோடு, தமக்கு கிடைக்காமல் போன வாய்ப்பை, தமது சகோதர மாணவர் குழுவுக்குப் பெற்றுத் தந்தமைக்காக ஜனாதிபதிக்கு நன்றி தெரிவித்தனர்.

## ஐமசு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்ற பதாகையை மாட்டிக்கொண்டு செய்தியாளர்கள் சந்திப்பை நடத்தினாலும் அவர்களுக்கு சட்ட ரீதியான உரிமையில்லை.

தற்போது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச்செயலாளர் எனக் கூறிக்கொள்ளும் நபரை பொதுச்செயலாளராக தேர்தல்கள் ஆணையாளர் ஏற்கமாட்டார். இதனால், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளர் எனக்கூறிக் கொள்வதற்கு அவருக்கு தார்மீக உரிமையில்லை.

இந்தவிடயம் சம்பந்தமாக நான் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்துள்ளேன். வழக்கின் தீர்ப்பு விரைவில் கிடைக்கும். அந்த தீர்ப்பின் அடிப்படையில், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளர் யார் என்பதை நீதிமன்றம் தீர்மானிக்கும்.

அனைத்து ஆட்சிகளிலும் மகிந்த அமரவீர அமைச்சராக பதவி வகிக்கின்றார் என்ற குற்றச்சாட்டை நான் ஏற்றுக்கொள்ள மாட்டேன். மஹிந்த அமரவீர இருக்கும் பக்கத்தில் ஆட்சி இருக்கின்றது - என்றார்.

காலைக்கதிர்
ஆசிரியர்பீட
தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com

காலைக்கதிர் Kalaikkathir

# அம்பாறையில் 623 வீடுகளுக்கு உரிமைப் பத்திரம் வழங்குக

## அமைச்சர் பிரசன்ன பணிப்பு



அம்பாறை மாவட்டத்தில் காணி உறுதிகள் தொடர்பான பிரச்சினைகளை உடனடியாகத் தீர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

அம்பாறை மாவட்டத்தில் செயற்படுத்தப்பட்டுள்ள 18 வீட்டுத்திட்டங்கள் தொடர்பில் 623 வீடுகளுக்கான வீட்டு உரிமைப்பத்திரங்களைவிரைவாகவழங்குமாறு தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக்கு நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க ஆலோசனை வழங்கினார்.

அம்பாறை மாவட்டத்தின் பிரதேச செயலகங்களுக்கு சொந்தமான காணியில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையால் வீடுகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. பிரதேச செயலகத்தால் காணி உறுதிப்பத்திரங்களுக்கு அதிக பெறுமதி வழங்கப்படுவதால் மக்கள் அதனை பெற்றுக்கொள்ள முன்வருவதில்லை என அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் அம்பாறை மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு தலைவருமான டபிள்யூ. டி.வீரசிங்க தெரிவித்தார்.

எனவே, குறித்த காணியை தேசிய வீடமைப்பு அதிகார சபையால் சுவீகரித்து அதற்கான உரிமைப் பத்திரங்களை வழங்குமாறு மக்கள் கோரிக்கை விடுப்பதாகவும் அந்த காணிகளின் உரிமையை தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக்கு மாற்றுவதற்கு அண்மையில் நடைபெற்ற அம்பாறை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு அங்கீகாரம் வழங்கியதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது உரையாற்றிய நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, தற்போது பிரதேச செயலகங்கள் வசம் உள்ள காணிகளின் உரிமை தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக்கு மாற்றப்பட்டதன் பின்னர் காணி உறுதிப் பத்திரங்களை உடனடியாக வழங்குவதில் பிரச்சினையில்லை.-என்றார்.

அம்பாறை மாவட்ட செயலகத்தில் அண்மையில் நடைபெற்ற 'உங்களுக்கு வீடு - நாட்டுக்கு எதிர்காலம்' வீடமைப்பு வேலைத்திட்டத்தின் கீழ் காணி உறுதி மற்றும் வீட்டுக்கடன் காசோலைகள் வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் பிரசன்ன ரணதுங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தலைமையில் 51 பயனாளிகளுக்கு 18.25 மில்லியன் ரூபா பெறுமதியான வீடமைப்புக் கடனுதவியும், அம்பாறை மாவட்டத்தில் 15 வீடமைப்புத் திட்டங்களை உள்ளடக்கிய 110 பயனாளிகளுக்கு காணி உறுதி வழங்கும் நிகழ்வும் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தலைமையில் இடம்பெற்றது. அம்பாறை மாவட்ட மக்களுக்கு 23 வருடங்களின் பின்னர் வீட்டு உரிமைப்பத்திரங்கள் வழங்கப்பட்டமை விசேட அம்சமாகும்.

1999 ஆம் ஆண்டு முதல் இது-வரையான காணிப்பிரச்சினைகள் இங்கு கலந்துரையாடப்பட்டதுடன் அப்பிரச்சினைகளுக்கான தீர்வுகளும் இங்குவழங்கப்பட்டன. அனைவருக்கும் வீட்டு உரிமைப்பத்திரங்கள் வழங்கு-வதற்கு தற்போதைய அரசாங்கம் கொள்கை ரீதியான தீர்மானத்தை எடுத்துள்ளதாக அமைச்சர் பிரசன்ன ரணதுங்க வலியுறுத்தினார்.

அதன் கீழ், நகர அபிவிருத்தி அதிகாரசபை, நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை, தேசியவீடமைப்புஅபிவிருத்திஅதிகாரசபை மற்றும் அவரது அமைச்சின் கீழ் உள்ள ஏனைய நிறுவனங்கள் ஏற்கனவே வீட்டுத்திட்டங்கள் தொடர்பாக உரிமைப் பத்திரங்களை வழங்க ஆரம்பித்துள்ளன.

வீட்டு உரிமைப்பத்திரங்களை வழங்கும்போது மக்களை பாதிப்புக்கு உள்ளாக்க வேண்டாம் என்றும் அமைச்சர் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

பிரதேச செயலகங்களுக்குச் சொந்தமான காணிகளை தேசிய வீடமைப்பு அதிகார சபைக்கு மாற்றியதன் பின்னர் ஜனாதிபதியின் கையொப்பமிடப்பட்ட இலவச ஒதுக்கீடு படிவமாக மக்களுக்கு உரிமைப் பத்திரங்கள் வழங்கப்படும் என தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் பொது முகாமையாளர் கே.ஏ.ஜனக தெரிவித்தார்.

பொது வசதிகளை மேம்படுத்துவதற்கு மதிப்பிடப்பட்ட பெறுமதிக்கு பதிலாக மக்கள் பணம் செலுத்த வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிகழ்வில் நகர அபிவிருத்தி மற் றும் வீடமைப்பு இராஜாங்க அமைச்சர் தேனுக விதானகமகே, அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான டபிள்யூ. டி.வீரசிங்க, ஏ.எல்.எம். அதாவுல்லா, எஸ்.எம்.எஸ்.முர்ரப், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் ரஜீவ் சூரியாராச்சி, அம்பாறை மாவட்ட செயலாளர் சிந்தக அபேவிக்ரம உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். (05)



## மதுபானசாலை அமைப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து கவனவீர்ப்புப் போராட்டம்

### பூநகரியில் நடந்தது

கிளிநொச்சி பூநகரியில் மதுபான சாலை அமைப்பதற்குஎதிர்ப்புதெரிவித்து பிரதேச பொது அமைப்புகளால் கவனவீர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டுள்ளது.

குறித்த போராட்டம் பூநகரி சங்குப் பிட்டி வீதியின் பழைய பிரதேச செயலக வளாகம் முன்றிலில் இருந்து குறித்த பேரணி ஆரம்பமாகி புதிய பிரதேச செயலகம் வரை சென்றடைந்தது.

அதாவது பூநகரி பிரதேசத்தின் மையப் பகுதியான வாடியடி பகுதியில் உணவகத்துடன்கூடிய மதுபானசாலை ஒன்று பல்வேறு எதிர்ப்புக்களுக்கு மத்தியில் ஏற்கனவே இயங்கி வருகின்றது.

இந்த நிலையில் அதனை மதுபான விற்பனை நிலையமாக மாற்றுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அதற்கு எதிர்ப்பு தெரிவித்து குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்து பிதேச செயலகத்தைச் சென்றடைந்த பேரணியின் இறுதியில் பிரதேச செயலர் மற்றும் மதுவரித் திணைக்கள அதிகாரிகளுக்கான மகஜர்களும் கையளிக்கப்பட்டுள்ளன.

இந்தப் போராட்டத்தில் பூநகரி பிரதேசத்தைசேர்ந்தபொதுஅமைப்புகள், பெண்கள் வலை அமைப்பு, பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டனர். (05)

## தாய், தம்பியை கோவிலில் இறக்கிவிட்டு வீடு திரும்பியவர் விபத்தில் உயிரிழப்பு



ஈச்சிலம்பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆணைத்தீவு பகுதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்து செவ்வாய்க்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தில் வெருகல் - இலங்கை துறைமு-கத்துவாரத்தைச் சேர்ந்த சந்திரராஜ் கஜேந்திரராஜ் (வயது 21) என்பவரே உயிரிழந்துள்ளார் எனவும் தெரியவருகின்றது.

வெருகல் கோயிலில் விசேட வழிபாட்டுக்கு தனது தாய் மற்றும் தம்பி ஆகியோரை கோயிலுக்கு மோட்டார் சைக்கிளில் ஏற்றிக்கொண்டு சென்று மீண்டும் வீடு திரும்பும் போது இவ்விபத்து இடம் பெற்றதாகவும் தெரிய வருகின்றது.

மோட்டார் சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளானதாக பொலிஸ் ஆரம்ப கட்ட விசாரணை மூலம் தெரியவந்துள்ளது.

உயிரிழந்த இளைஞரின் சடலம் ஈச்சிலப்பற்று பிரதேச வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. விபத்து தொடர்பில் ஈச்சிலப்பற்றுபொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (05)

## தாய்லாந்தில் சிகிச்சை பெறும் முத்துராஜாவை பார்வையிட இலங்கை வைத்தியர்கள பயணம்

சுகவீனம் காரணமாக தாய்லாந்துக்கு கொண்டு செல்லப்பட்ட முத்துராஜா யானையைப் பார்ப்பதற்காக இலங்கை மிருகக்காட்சிச்சாலை திணைக்களத்தின் கால்நடை சுகாதார பணிப்பாளர் வைத்தியர் சந்தன ராஜபக்ஷ உள்ளிட்ட குழுவினர் செவ்வாய்க்கிழமை தாய்லாந்து சென்றுள்ளனர்.

தெஹிவளை மிருகக்காட்சிசாலையில் முத்துராஜா யானைக்கு சிகிச்சை அளித்த கால்நடை வைத்தியர் திருமதி மதுஷா பெரேரா மற்றும் சிரேஷ்ட விலங்கு காப்பாளர் நந்துன் அன்லமுதலி ஆகியோர் இக்குழுவில் இடம் பெற்றிருந்தனர்.

தாய்லாந்து அரசின் அழைப்பின் பேரில் இந்தக் குழு அனுப்பப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (05)

## நீங்கள் யார் என்பது குறித்து எனக்குக் கவலையே இல்லை

### கோட்டாவிடம் தெரிவித்த நிசாந்த சில்வா



20 வருடங்களாக நிசாந்த டி சில்வா இலங்கையின் முக்கிய பொலிஸ் உத்தியோகத்தர்களில் ஒருவராகக் காணப்பட்டார்.

மஹிந்த ராஜபக்ஷ ஆட்சியிலிருந்து 2015 இல் அகற்றப்பட்டதும் புதிய அரசாங்கம் முன்னைய அரசாங்கத்தின் காலத்தில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் குறித்து விசாரணை செய்யும் பொறுப்பை நிசாந்த டி சில்வாவிடம் ஒப்படைத்தது.

அவர் ஐரோப்பிய நாடுகளின் புலனாய்வு பிரிவினருக்கும் ஹேக்கின் மக்கள் தீர்ப்பாயத்திற்கும் வாக்கு-மூலங்களை வழங்கியுள்ளார். எனினும் அவர் தனது கதையை ஊடகங்களுக்;குத் தெரிவித்திருப்பது இதுவே முதல் தடவை.

**கேள்வி:** ஏன் நீங்கள் இலங்கையில் இருக்காமல்இங்குவந்திருக்கின்றீர்கள்?

**பதில்:** எனக்கும் எனது குடும்பத்தினருக்கும் இராணுவபுலனாய்வு பிரிவினர் -கடற்படை புலனாய்வு பிரிவினரும் முன்னாள் ஜனாதிபதியும் கொலை அச்சுறுத்தல் விடுத்தனர்.

பத்திரிகை ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்க படுகொலை செய்-யப்பட்ட விவகாரமே நிசாந்த சில்வா கையாண்ட விடயங்களில் முக்கியமானது. இந்த விசாரணைகளின்போது அவருக்குகிடைத்தஆதாரங்கள்மிகவும் மோசமான செயற்பாடுகளுக்காக பெயர் பெற்ற திரிபோலி பிளாட்டுன் குறித்து அவர் விசாரணைகளை மேற்கொள்ளவேண்டிய நிலையை ஏற்படுத்தின. நான் திரிபோலி குழுவை சேர்ந்தஐந்துநபர்களின் தொலைபேசி இலக்கங்களைக்கண்டுபிடித்தேன். அந்த தொலைபேசி இலக்கங்கள் லசந்த விக்கிரமதுங்கவின் படுகொலைக்கு பயன்படுத்தப்பட்டன என நிசாந்த தெரிவித்தார்.

நான் தொலைபேசி ஆவணங்கள் உட்பட பல விடயங்களை ஆராய்ந்தேன். இடங்களைக் கண்டுபிடிக்க முயன்றேன் என நிசாந்த சனல் 4 இற்குத் தெரிவித்தார்

அவர் கண்டுபிடித்த ஆதாரங்கள் லசந்த படுகொலை செய்யப்பட்ட அன்று காலை அவரது வீட்டிலிருந்து திரிபோலி குழுவை சேர்ந்தவர்கள் அவர் கொல்லப்படும் இடம்வரை பின்தொடர்ந்ததை உறுதி செய்தன.

பலர் கோட்டாபய ராஜபக்ஷவே லசந்த படுகொலையின் பின்னணியில் இருந்தார் என சந்தேகப்படுகின்றனர்.

தொலைபேசி உரையாடல்கள் குறித்த ஆவணங்களை ஆராய்ந்து அந்த சந்தேகம் சரியானது என்பதை உறுதி செய்தவர் நிசாந்த. ஆகவே நான் கோட்டாபய ராஜபக்ஷவை சிஐடிக்கு அழைத்தேன் என அவர் தெரிவித்தார்.

அது ஒருதுணிச்சலானநடவடிக்கை - அதிகாரத்தில் இல்லாத போதிலும் கோட்டாபய ராஜபக்ஷ அச்சத்தை ஏற்படுத்தும் நபராக காணப்பட்டார். முக்கிய இடங்களில் செல்வாக்கு உள்ள நண்பர்கள் அவருக்கு இருந்தனர்.

கோட்டாபயராஜபக்ஷ என்னிடம் நீர் ஏன் என்னை லசந்த விக்கிரமதுங்க கொலைதொடர்பில் சந்தேகநபர் என குறிப்பிட்டுள்ளீர் எனகேட்டார் என நிசாந்த தெரிவித்தார். அதற்கு நான் தேவையற்ற விடயங்களை செய்யவில்லை. தேவையான விடயங்களைமாத்திரம்செய்கின்றேன் எனத் தெரிவித்தேன் நீங்கள் யார் என்பது குறித்து எனக்கு கவலையில்லை எனத் தெரிவித்தேன் எனவும் நிசாந்த தெரிவித்தார். நான் உங்களை சந்தேகநபராக பெயரிட்டுள்ளேன்எனத்தெரிவித்தேன். கோட்டபாய என்னை பற்றி அதிருப்தி யடைந்தவராக காணப்பட்டார் என நிசாந்ததெரிவித்தார். (05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## இரட்டை நிலைப்பாட்டை கைவிடவேண்டியது அவசியம்

பிரித்தானியாவின் செனல் 4 அலைவரிசையில் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான விசேட அறிக்கையின் உண்மைகள் தொடர்பில் சுயாதீன பன்னாட்டு விசாரணைக் குழுவொன்று விரிவான விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் என பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் தெரிவித்துள்ளார். எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவும் அந்தக் கோரிக்கையை வலியுறுத்தியுள்ளார். உலக சமூகத்தின் ஆதரவுடனான சுயாதீனமான விசாரணை முன்னெடுக்கப்படவேண்டும் என்று ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர் ஆணையரும் வலியுறுத்தியுள்ளார். எல்லோரும் இந்த விவகாரத்தில் இலங்கைக்குள் நீதி கிடைக்கும் என்று நம்பவில்லை என்பதே அவர்கள் பன்னாட்டு விசாரணையைக் கேட்பதற்கான காரணம்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக ஆராய்வதற்காக நாடாளுமன்ற குழுவொன்றை நியமிக்க அரசாங்கம் தயாராக உள்ள போதிலும், அந்த குழுவின் ஊடாக இந்த விசாரணைகள் பக்கச்சார்பற்ற மற்றும் நேர்மையான முறையில் முன்னெடுக்கப்படும் என எதிர்பார்க்க முடியாது எனப் பேராயர் கர்தினால் மல்க்கம் ரஞ்சித் சுட்டிக்காட்டுகிறார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் ராஜபக் ஷக்களை மீண்டும் ஆட்சிக்குக் கொண்டு வரும் நோக்கத்தோடு செய்யப்பட்ட தாக்குதல் என்று சனல் – 4 வெளியிட்ட காணொளி நிறுவ முற்படுகின்றது. அதற்குக் காரணமாக இருந்தவர்களின் தயவில்தான் இப்போதும் இலங்கையில் ஆட்சி நடக்கிறது. எனவே அவர்களின் கீழ் நடத்தப்படக்கூடிய எந்தவொரு விசாரணையும் நீதியாகவும், நியாயமாகவும் பக்கச்சார்பற்றும் நடக்காது என்கிற காரணத்தால்தான் பன்னாட்டு விசாரணை ஒன்றை பேராயரும் எதிர்க் கட்சித் தலைவரும் ஏனையவர்களும் கோருகின்றார்கள்.

இதையேதான் தமிழர்களும் நீண்ட காலமாக வலியுறுத்தி வருகின்றார்கள். தமிழர்களுக்கு எதிராகப் போர்க் குற்றங்களையும் மனித உரிமை மீறல்களையும் மனித குலத்திற்கு எதிரான குற்றங்களையும் நிகழ்த்தியவர்கள், அதற்கு உத்தரவிட்டவர்கள் ஆட்சியில் இருக்கும்போது நீதியான, நியாயமான, பக்கச்சார்பற்ற விசாரணை நடைபெறுவது சாத்தியமில்லை என்பதால்தான் அவை குறித்த பன்னாட்டு விசாரணையைத் தமிழர்கள் கடந்த 12 ஆண்டுகளுக்கும் மேலாக வலியுறுத்தி வருகின்றார்கள்.

ஆனால், தமிழர்களின் இந்தக் கோரிக்கையைக் கடந்த காலங்களில் எதிர்க் கட்சித் தலைவரோ பேராயர் கர்தினால் மல்க்கம் ரஞ்சித்தோ கடந்த காலங்களில் ஆதரித்ததில்லை. அதற்காகக் குரல் எழுப்பியதில்லை. தமிழர்களின் விவகாரம் என்று வருகின்றபோது இவர்கள் அனைவரும் சிங்களவர்களாக ஒன்றிணைந்து நின்று பன்னாட்டு விசாரணைக்கு எதிரான நிலைப்பாடுகளைக்கூட சில சமயங்களில் எடுத்திருக்கிறார்கள். தமிழர்களின் அத்தகைய கோரிக்கைகளின் நியாயப்பாட்டை அவர்கள் ஒருபோதும் புரிந்துகொண்டதில்லை. அவர்கள் இத்தகைய இரட்டை நிலைப்பாட்டை முன்வைக்கும் வரைக்கும் உயிர்த்த ஞாயிறு தொடர்பில் பன்னாட்டு விசாரணை ஒன்று நடத்தப்படுவது சாத்தியமானதல்ல.

தமிழர்களின் கோரிக்கையை நிராகரித்து, பன்னாட்டு விசாரணையை மட்டுமல்ல, நீதியான சுயாதீனமான உள்நாட்டு விசாரணையையும்கூட நடத்தாத இந்த ஆட்சியாளர்கள் உயிர்த்த ஞாயிறு விடயத்தில் மட்டும் அவ்வாறு செயற்பட்டுவிடுவார்கள் என்று ஒருபோதும் எதிர்பார்க்க முடியாது. அதை எப்படிப் புறக்கணிப்பது, அழுத்தங்களை எப்படிச் சமாளிப்பது என்பது தொடர்பில் தமிழர் விவகாரத்தில் ஆளும் தரப்புக்கு அதிக அனுபவம் உண்டு. எனவே இப்போது முன்வைக்கப்படும் பன்னாட்டு விசாரணைக் கோரிக்கை அடியோடு நிராகரிக்கப்படத்தான் வாய்ப்புண்டு.

அந்தக் கோரிக்கை நிறைவேறவேண்டுமாயின், உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு பன்னாட்டு விசாரணையைக் கோரும் அனைத்துத் தரப்பினரும் தமது இரட்டை நிலைப்பாட்டைக் கைவிட்டுத் தமிழர்களுக்கு எதிரான குற்றங்களுக்காகவும் பன்னாட்டு விசாரணையை வலியுறுத்த முன்வரவேண்டும். அப்படி அனைவரும் ஒன்றுபடும்போதுதான் ஆட்சியாளர்களை சிறிதளவிலாவது அசைத்துப் பார்க்கக்கூடியதாக இருக்கும்.



## அமானுஷ்யங்கள் நிறைந்த கபிலவத்தை யாத்திரை

வி.ரி.சகாதேவராஜா

பல தெய்வீக அமானுஷ்ய அனுபவங்களை கொண்ட முருகப் பெருமானின் ஆதி இருப்பிடமான கபில்வத்தை யாத்திரை மிக மிக சிறப்பாக கடந்த வாரத்தில் நடைபெற்றது.

பிரபல இந்திய பணவளக்கலை நிபுணர் குபேரகுருஜீ ஆனந்த், சித்தர்கள் குரல் அமைப்பின் ஆஸ்தான குரு சிவசங்கர் தலைமையிலான குழுவினருடன் ஆதி கதிர்காமம் என அழைக்கப்படும் கபில்வத்தை யாத்திரையில் பங்கேற்றமை சிறப்பம்சமாகும்.

சித்தர்கள் குரல் அமைப்பின் தலைவர் ஆதித்தன் உப தலைவர் மனோகரன் ஏற்பாட்டில் நம சிவாய சிவயோகி மகேஸ்வரன் சுவாமிகளின் வழிகாட்டலில் நாற்பது அடியார்கள் இந்த யாத்திரையில் பங்கேற்றனர்.

வடக்கு கிழக்கு மலையகம் உள்ளிட்ட பிராந்தியங்களில் இருந்து இந்த நாற்பது அடியார்களும் பங்கேற்றிருந்தனர்.

ஒவ்வொரு இடங்களிலும் குபேர குருஜீ ஆனந்த், அற்புதமான குபேர வழிபாடுகள், மந்திர தீட்சை, வேல் தீட்சை, குபேர தியானங்கள், செல்வங்களை ஈர்க்கும் ஆழ்மன தியானங்கள் என அனைத்தையும் ஒளிவு மறைவு இல்லாமல் கற்று தந்தார். ஒவ்வொரு இடத்திலும் அற்புதமான ஆன்மீக சத்சங்கத்தை நிகழ்த்தினார்.

பூஜைகள் மற்றும் வழிபாடுகள் அனைத்தையும் சிவயோகி மகேஸ்வரன் சுவாமிகள் சிறப்பாக ஒழுங்கமைத்து நெறிப்படுத்தினார்.

யாத்திரை ஆரம்பத்தில் முறையாக சம்மாந்துறை கோரக்கர் ஆலயத்தில் சர்வ வல்லமை வாய்ந்த 210 சித்தர்கள் வேள்வி நிகழ்த்தப்பட்டு, திருஷ்டி தோஷங்களை போக்கும் மூலிகை குளியலுடன் பயணம் ஆரம்பமானது.


பின்னர் மொனராகலையில் இருந்து காடு தொடங்கும் இடத்தில் வன பூஜை மற்றும் இடும்பன் பூஜை செய்து உடல் மன ஆற்றல்களை பெற வனபோஜனம் செய்யப்பட்டது.

தொடர்ந்து கபிலவத்தை மண்ணில் நள்ளிரவில் வீரபாகு தேவர் மற்றும் ஸ்வர்ணாகர்ண வைரவருக்கு பூஜை, வன தேவதைகளுக்கு ஒவ்வொரு வருடமும் செய்யும் வன பூஜை, கங்கை ஆற்றில் பிரமாண்டமான மரகதலிங்க அபிகேஷம், நள்ளிரவில் சத்ரு சம்ஹார சண்முக சக்கர யாக குண்டத்தில் ஆறு சக்திகளாக ஆறு லிங்கங்கள் பிரதிஷ்டையை செய்யப்பட்டு நம்முடைய ஆறு ஆதார சக்கரங்களை விழிக்க வைக்கும் சத்ரு சம்ஹார ஹோமம், இரவு முழுவதும் இயற்கையில் இருந்து அபூர்வ ஆற்றல்களை பெரும் மகா தேவம்ருத்யஞ்சய தவம், ஒரு லட்சம் பஞ்சாட்சர ஜெபம், தொடர்ந்து பஞ்சபூத ஆராதனை, பாரம்பரிய பொங்கல் வழிபாடு என அனைத்து வழிபாடுகளும் சிறப்பாக நடைபெற்றது. இரு நாட்களும் இனிமையான அற்புதமான பல அமானுஷ்ய அனுபவங்கள் கிடைத்தன.










JAFFNA'S FIRST HOUSING &
CONSTRUCTION EXHIBITION
JAFFNA
HOUSING & CONSTRUCTION
EXHIBITION
2023
யாழ் மண்ணில் முதல் முறையாக
யாழ் வீடமைப்பு மற்றும் கட்டுமான
கண்காட்சி 2023
FOR ENQUIRY CALL MINHAJ 077 888 2700
கட்டிட நிர்மாணம், வீடமைப்பு
மற்றும் வீட்டு உபகரணங்கள்
தொடர்பான அனைத்து விடயங்களும்
ஒரே கூரையின் கீழ்.
அனைவரையும் அழைக்கின்றோம்
15 16 17
SEPTEMBER
MUTTRAWELI GROUNDS, JAFFNA
Official Sponsor
Hayleys Aventura Innovative Solutions
Organizer
Iyngaran Media Solution (Pvt) Ltd.
In Association
CCI Chamber of Construction Industry of Sri Lanka
Radio Partner
Print Media Partner
Digital Media Partner
வீரகேசரி
காலைக்கதிர் Kalaikkathir

காலைக்கதிர்
Kalaikkathir

# உளநலம் பாதிக்கப்பட்ட நோயாளர்களுக்கான மின் வலிப்பு சிகிச்சை இயந்திரம் அன்பளிப்பு

## தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில்







தெல்லிப்பழை ஆதார வைத்திய சாலையில் உள நலம் பாதிக்கப்பட்ட நோயாளருக்கான மின் வலிப்பு சிகிச்சை இயந்திரம் (ஈ.சி.ரி.) பிரான்ஸ் நாட்டை தலைமையகமாக கொண்ட புலம் பெயர் தமிழர் அமைப்பான இலங்கை - இந்தியா வர்த்தக சங்கத்தினரால் ஒரு கோடி ரூபா பெறுமதியில் சாலைக்கு செவ்வாய்க்கிழமை அன்பளிப்பு செய்து வைக்கப்பட்டது.

வைத்திய சாலையின் வைத்திய அத்தியட்சகர் தலைமையில் உளநல சிகிச்சை நிபுணர்களான வைத்தியகலாநிதிகள் ரி.உமாகரன், பேராசிரியர் எஸ்.சிவயோகன் ஆகிய இருவைத்தியநிபுணர்களின் ஒருங்கமைப்புடன் சமூக செயற்ப்பாட்டு பொறுப்பு உத்தியோத்தர் சுதர்சன் மற்றும் உளநல விடுதி பொறுப்பு தாதிய உத்தியோகத்தர் ஜனார்த்தனன் ஆகியோரின் வழிநடத்துதலில் மேற்படி நிகழ்வு நடைபெற்றது.

மேலும் இந்த நிகழ்வுக்கு இலங்கை இந்திய வர்த்தக சங்கத்தின் தலைவர் இராசையா சிறிதரன், உப தலைவர், செயளாளர் மற்றும் உறுப்பினர்கள் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.

வைத்திய சாலையின் வைத்தியர்கள், வைத்திய சாலையின் தாதிய பரிபாலகிகள் மற்றும் உளநல பிரிவின் தாதியர்கள் உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டனர். பின்னர் வைபவ ரீதியாக மின் வலிப்பு சிகிச்சை இயந்திரம் உளநல பொறுப்பு வைத்திய நிபுணர்களிடம் கையளிக்கப்பட்டது. (05)

# ஐ.நா. நிரந்தர வதிவிட பிரதிநிதி யாழ். வருகை





ஐக்கிய நாடுகள் சபையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி மார்க் ஆண்ட்ரே பிராஞ்யாழ்ப்பாண மாவட்டத்திற்கு விஜயம் செய்துள்ளார்.

திங்கட்கிழமை வருகை தந்ததுடன் நேற்று (புதன்கிழமை) பல்வேறுபட்ட சந்திப்பில் ஈடுபட்டார்.

யாழ். மாவட்ட செயலாளருடன் கலந்துரை யாடல்

ஐக்கிய நாடுகளின் வதிவிடப்பிரதிநிதிக்கும் யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் அ.சிவபாலசுந்தரனுக்கும் இடையிலான யாழ்ப்பாண மாவட்டத்தின் தற்போதைய நிலைமை தொடர்பான விரிவான கலந்துரையாடல் மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர், உதவி மாவட்ட செயலாளர், பிரதி திட்டமிடல் பணிப்பாளர் மற்றும் ஐக்கிய நாடுகளின் வதிவிட அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

ஐக்கிய நாடுகளின் வதிவிடப்பிரதிநிதி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு விஜயம் செய்து பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் சிவக்கொழுந்து சிறீசற்குணராஜாவை சந்தித்தார்.

யாழ்ப்பாணப் கோட்டைக்கு விஜயம் செய்த ஐக்கிய நாடுகளின் இலங்கைக்கான வதிவிடப்பிரதிநிதி அங்கிருந்து யாழ் நகரத்தின் அழகை பார்வையிட்டார். (05)

# பிள்ளையான் எதிரணி உறுப்பினர் அல்லர் மஹிந்தானந்தாவுக்கு நளின் சுட்டிக்காட்டு

இராஜாங்க அமைச்சர் பிள்ளையான் எதிர்க்கட்சி உறுப்பினர் என்று நினைத்துக்கொண்டு மஹிந்தானந்த அளுத்கமகே கருத்துரைக்கிறார். பிள்ளையானின் ஊடக செயலாளராகவே அன்ஷிப் அசாத் மௌலானா செயற்பட்டார் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்தார். நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற அமர்வின்போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர்மேலும் உரையாற்றியவை வருமாறு -

சனல் -04 காணொளியில் தகவல்களை வெளியிட்ட அன்ஷிப் அசாத் மௌலானாவின் வங்கி வைப்பு, நிதிஇருப்பு தொடர்பில் ஆளும் தரப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகே நாடாளுமன்றத்தில் விசேட உரையாற்றினார்.

இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தனின் (பிள்ளையான்) ஊடக செயலாளராக அன்ஷிப் அசாத் மௌலானா செயற்பட்டார்.

அத்துடன் பிள்ளையானின் நிதி முகாமைத்துவத்துக்கு பொறுப்பாளராக செயற்பட்டார்.

நாடாளுமன்ற உறுப்பினர் சிவநேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) எதிர்க்கட்சியின் உறுப்பினர் என்ற நிலைப்பாட்டில் இருந்து கொண்டு நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகே கருத்துரைக்கிறார்.

நிதி முறைகேடு இடம்பெற்றிருந்தால் நிதி குற்றத்தடுப்புபிரிவில் முறைப்பாடளித்து விசாரணை செய்யுங்கள் - என்றார்.

இதன்போது எழுந்து உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகே, அன்ஷிப் அசாத் மௌலானாவின் தனியார் வங்கி சேமிப்பு வைப்பு தொடர்பில் விசாரணைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அன்ஷிப் அசாத் மௌலானாவின் வங்கிக் கணக்கில் உள்ள பணத்தை இராஜாங்க அமைச்சர் பிள்ளையானின் நிதி என்று குறிப்பிட முடியாது. ஆகவே விசாரணைகள் முன்னெடுக்கப்படுகிறது.-என்றார். (05)

# கொழும்பு, டார்லி வீதியிலுள்ள சு. க. தலைமையகம் பூட்டு

## திறப்புக்கள் மைத்திரிபாலவிடம்

*கொழும்பு -10 டார்லி வீதியிலுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகம் நேற்று (புதன்கிழமை) அதிகாலை முதல் மூடப்பட்டுள்ளதாக கட்சியின் உள்ளக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.*

*கட்சியின் தலைமையகத்தின் அனைத்துத் திறப்புக்களும் கட்சியின் தலைவரான முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் உள்ளன என அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன. (05)*

## உயர் தரப் பரீட்சையில்

# பார்வையற்ற மாணவன் மாவட்டத்தில் முதலிடம்



வெளியாகியுள்ள கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில், கெலிஓயா ஸ்ரீ பஞ்சரதன மத்திய மகா வித்தியாலயத்தின் பார்வையற்ற மாணவன் திவங்க ரணபாகு பிரேமலால் அப்போசா உயர்தரப் பரீட்சையில் கலைப் பிரிவில் கண்டி மாவட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

கலைப் பிரிவில் முழு இலங்கையிலும் 75 ஆவது இடத்தைப் பெற்றுள்ள திவங்க, வாய்மொழி முறை மூலம் உயர்தரப் பரீட்சையில் தோற்றியுள்ளார்.

இவர் 2018 ஆம் ஆண்டு தனது 15 ஆவது வயதில் முழுமையான பார்வைக் குறைபாட்டுக்கு ஆளாகியுள்ளதுடன், மற்றும் அவரது தாயார், இசை டிப்ளோமா பெற்றவராவார்.

இவர் புத்தகங்களைப் படித்து அவரை தேர்வுக்குத் தயார்படுத்தியுள்ளதுடன், இந்த சாதனை குறித்து திவாங்கவிடம் கேட்டபோது, இந்த சாதனை குறித்து மகிழ்ச்சியடைவதாகவும், கண்டி மாவட்ட வரலாற்றில் பார்வையற்ற மாணவன் ஒருவன் அனைத்து பாடத்திலும் முதலிடம் பெறுவது இதுவே முதல்முறை என்றும் கூறியுள்ளார்.

வழக்கமான பரீட்சைகளை நெருங்கிக்கொண்டிருந்தபோதுதான் பார்வையை இழந்ததாகவும், தனக்கு கண்பார்வை குறைவதற்கு எந்த காரணமும் இல்லை என்று மருத்துவர்கள் கூறுகின்றனர். மேலும் பார்வையைமீட்க சிகிச்சைபெற்று வருவதாகவும் திவாங்கா தெரிவித்துள்ளார். (05)

# உள்ளூர் உற்பத்தி அரிசிக்கு சமூக பாதுகாப்பு வரிவிலக்கு

விசேட தேவையுடையவர்கள் பயன்படுத்தும் உபகரணங்களுக்கும் உள்ளூர் அரிசி உற்பத்திக்கும் சமூகப் பாதுகாப்பு வரியிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தனது ருவிட்டர் பதிவில் இதனைக் குறிப்பிட்டுள்ளார். (05)

# தபாலில் வந்த பார்சலில் கஞ்சா



இலங்கைக்கு தபால் மூலம் அனுப்பப்பட்ட பொதிகளை ஆய்வு செய்த போது அதில் 1406 கிராம் கஞ்சா மற்றும் செயற்கை யாக தயாரிக்கப்பட்ட போதை மாத்திரைகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

சுங்க போதைப்பொருள் தடுப்புபிரிவு மற்றும் பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்பு பணியக அதிகாரிகள் முன்னிலையில் கொழும்பு தபாலகத்தில் இந்த சோதனை மேற்கொள்ளப்பட்டது.

கண்டுபிடிக்கப்பட்டுள்ள போதைப்பொருளின் சந்தைப் பெறுமதி 14,085,000 ரூபா எனத் தெரியவந்துள்ளது.

அமெரிக்கா, கனடா மற்றும் பிரித்தானியா ஆகிய நாடுகளில் இருந்து இலங்கையின் பல்வேறு மாகாணங்களில் உள்ளவர்களின் முகவரிகளுக்கு இந்த பொதிகள் அனுப்பப்பட்டுள்ளன எனத் தெரியவந்துள்ளது.

நீண்ட நாள்களாக பொதிகள் அகற்றப்படாததால் அதிகாரிகள் அவற்றை ஆய்வு செய்தனர்.

கைப்பற்றப்பட்ட போதைப்பொருள் மேலதிக விசாரணைகளுக்காக பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்படவுள்ளது.

இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 86 மில்லியன் ரூபாவிற்கும் அதிகமான பெறுமதியான போதைப்பொருள் தொகையை தபால் மதிப்பீட்டு அலுவலகத்தின் சுங்க அதிகாரிகள் கண்டுபிடித்துள்ளனர் என மேலதிக தகவல்கள் தெரிவிக்கின்றன. (05)

# 225 உறுப்பினர்களும் அழிய வேண்டும் என மக்கள் குறிப்பிடுவது நியாயமே

## காவிந்த ஜயவர்தன கடும் விசனம்

நாட்டு மக்கள் குறித்து அவதானம் செலுத்தாமல் அரசாங்கத்தைப் பாதுகாக்க ஆளும் தரப்பினர்கள் செயற்படுவார்களாயின் 225 நாடாளுமன்ற உறுப்பினர்களும் அழிவடைய வேண்டும் என மக்கள் குறிப்பிடுகின்றமை நியாயமானது. நாடாளுமன்றத்தில் நம்பிக்கையில்லா பிரேரணை தோற்கடிக்கப்படலாம். தோற்கடிக்கப்படுவது நம்பிக்கையில்லா பிரேரணை அல்ல, மக்களின் எதிர்பார்ப்பு என்பதை ஆளும் தரப்பினர் விளங்கிக்கொள்ள வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்தன குறிப்பிட்டார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற அமர்வின்போது சுகாதார அமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணையை முன்வைத்து உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர்மேலும் உரையாற்றியவை வருமாறு–

நாட்டில் சுகாதாரத்துறை எதிர்கொண்டுள்ள நெருக்கடிக்கு தீர்வின்மை, தரமற்ற மருந்துக் கொள்வனவு, விலை மனுகோரலுக்கு அப்பாற்பட்ட வகையில் மருந்துக் கொள்வனவு, அத்தியாவசிய மருந்து தட்டுப்பாடு, மருத்துவ உபகரணங்களுக்கான தட்டுப்பாடு ஆகிய காரணிகளை அடிப்படையாகக் கொண்டு சுகாதாரத்துறை அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்லவுக்கு எதிராக அரசமைப்பின் 27ஆவது பிரகாரம் நம்பிக்கையில்லா பிரேரணையை முன்வைத்துள்ளோம்.

சுகாதார அமைச்சர் பொறுப்பற்ற வகையில் செயற்பட்டுள்ளார். நாட்டு மக்களின் ஆரோக்கியத்தை உறுதிப்படுத்த சுகாதாரத்துறை அமைச்சர் தவறியுள்ளார். சுகாதார அமைச்சரின் பொறுப்பற்ற செயற்பாட்டால் அப்பாவி மக்கள் தற்போது பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

மருந்து பற்றாக்குறை, விசேட வைத்தியர்கள் நாட்டை விட்டு வெளியேறல், தரமற்ற மருந்து கொள்வனவு ஆகிய காரணிகளால் சுகாதாரத்துறை முழுமையாக வீழ்ச்சியடைந்துள்ளது. மருத்துவ கட்டமைப்பில் மருந்து தட்டுப்பாட்டினால் முக்கிய சிகிச்சைகள் தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ளன. நாட்டில் உள்ள பெரும்பாலான வைத்தியசாலைகளில் உயிர் காக்கும் மருந்துப் பொருள்களின் தட்டுப்பாடு நிலவுகிறது.

அரச வைத்தியசாலைகளில் மருந்து தட்டுப்பாடு நிலவுகிறபோதும் மருத்துவ சிகிச்சைகள் நிறுத்தப்படும்போதும் நோயாளிகள் தனியார் வைத்தியசாலைகளுக்குச் செல்ல நேரிடும். நாட்டு மக்கள் பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள பின்னணியில் தனியார் மருத்துவமனைகளுக்கு பொதுமக்களால் எவ்வாறு செல்ல முடியும்? அதிக செலவு செய்து சிகிச்சை பெற முடியும்? வசதியில்லாதவர்களின் உயிர் கேள்விக்குள்ளாக்கப்பட்டுள்ளது.

வைத்தியர்கள் உளவியல் ரீதியில் பாதிக்கப்பட்டுள்ளார்கள். மருந்து பொருள்கள் தட்டுப்பாட்டால் வைத்தியர்கள் அதிருப்தியடைந்துள்ளார்கள். மருந்து தட்டுப்பாட்டுக்கு மத்தியில் சிறந்த சேவையை வழங்க முடியாது என்பதால் நாட்டை விட்டு வெளியேறுவதை பிரதான இலக்காக வைத்தியர்கள் கருதுகிறார்கள்.

சுகாதார அமைச்சருக்கும் எமக்கும் இடையில் எவ்வித தனிப்பட்ட முரண்பாடுகளும் கிடையா. சுகாதார துறையில் தோற்றம் பெற்றுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் சுகாதார அமைச்சர் தோல்வியடைந்துள்ளார்.

நாட்டு மக்களுக்காகவே அரசியல்வாதிகள் அரசியலில் ஈடுபடுகிறார்கள். மக்களின் சுகாதாரம் பாரிய அச்சுறுத்தலுக்குள்ளாக்கப்பட்டுள்ள நிலையில் அரசியல்வாதிகள் அரசியலில் ஈடுபடுகின்றமை பயனற்றது. அரசாங்கத்தை வீழ்த்தும் நோக்கில் நம்பிக்கையில்லா பிரேரணையை கொண்டு வரவில்லை. நாட்டில் சுகாதாரத்துறை நெருக்கடிக்குள்ளாகவில்லை என்று ஆளும் தரப்பினரால் குறிப்பிட முடியுமா?

சுகாதார அமைச்சருக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளுக்கு சாட்சியங்கள் இல்லை என பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் குறிப்பிடுகிறார். சுகாதார அமைச்சின் கீழ் உள்ள தேசிய மருத்துவ ஆராய்ச்சி நிறுவகம் தரமற்ற மருந்துகள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாக அறிக்கை வெளியிட்டுள்ளது. தரமற்ற மருந்து இறக்குமதி செய்யப்பட்டு அவை வைத்தியசாலைகளுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளது. இதனால் அப்பாவி மக்களே இன்று பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

நாட்டு மக்கள் குறித்து அவதானம் செலுத்தாமல் அரசாங்கத்தை பாதுகாக்க ஆளும் தரப்பினர்கள் செயற்படுவார்களாயின், 225 நாடாளுமன்ற உறுப்பினர்களும் அழிவடைய வேண்டும் என மக்கள் குறிப்பிடுகின்றமை நியாயமானது. நாட்டுக்கு கொண்டு வரும் மருந்துப்பொருள்கள் முறையாக பதிவுசெய்யப்பட வேண்டும். நாடாளுமன்றத்தில் நம்பிக்கையில்லா பிரேரணை தோற்கடிக்கப்படலாம். ஆனால் தோற்கடிக்கப்படுவது நம்பிக்கையில்லா பிரேரணை அல்ல, மக்களின் எதிர்பார்ப்பு என்பதை ஆளும் தரப்பினர் விளங்கிக்கொள்ள வேண்டும். – என்றார். (05)

காலைக்கதிர் Kalaikkathir

# ஏப்ரல் 21 குண்டுத் தாக்குதலினால் பாதிக்கப்பட்ட வெளிநாட்டவர்கள் சர்வதேச நீதிமன்றை நாடுவர்

## எஸ்.எம்.மரிக்கார் எச்சரிக்கை



ஏப்ரல் 21 குண்டுத் தாக்குதல் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட வெளிநாட்டவர்கள் நிச்சயம் சர்வதேச நீதிமன்றத்தை நாடுவார்கள். சனல் 4 வெளியிட்டுள்ள காணொளியை தொடர்ந்து புலனாய்வு பிரிவின் பிரதானி சுரேஷ் சலே மீது பழியை சுமத்தி தப்பித்துக்கொள்ள ஒருதரப்பினர் முயற்சிக்கிறார்கள். ராஜபக்ஷர்களின் ஆட்சியில் கொலை, இரத்தம் என்பது பிரதான அம்சங்களாகும் என ஐக்கிய மக்கள்சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்லவுக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியவை வருமாறு -

ஏப்ரல் 21 குண்டுத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் சனல் 4 செய்தி வெளியிட்டதன் பின்னர் பலர் கலக்கமடைந்துள்ளனர். அமெரிக்காவின் பி.பி.சி செய்தி நிறுவனமும் எதிர்வரும் காலங்களில் பல விடயங்களை வெளியிடலாம். உண்மையை வெகுநாளைக்கு மறைக்க முடியாது.

ராஜபக்ஷர்கள் மரணம், கொலை ஆகியவற்றின் ஊடாகவே ஆட்சிக்கு வருவார்கள், கொலைகள் ஊடாகவே ஆட்சியை தக்கவைத்துக் கொள்வார்கள். கோட்டபய ராஜபக்ஷ பாதுகாப்புச் செயலாளராக பதவி வகித்த வேளையில் தொழில் வல்லுநர்கள் ஊடகவியலாளர் சங்கத்தின் தலைவர் போத்தல ஜயந்த மற்றும் அந்த சங்கத்தின் செயலாளர் சனத் பாலசூரிய ஆகியோரை அழைத்து 'அளவுக்கு மீறி செயற்பட வேண்டாம், தெரியும் தானே நடப்பதை... ஆகவே ஊடகவியலாளர்களின் போராட்டத்தை உடன் நிறுத்துங்கள்' என்று அச்சுறுத்தினார்.

பாதுகாப்புச்செயலாளராக கோட்டாபய ராஜபக்ஷ பதவி வகித்தபோது பல நெருக்கடிகளுக்கு மத்தியில் தொழில் வல்லுநர்களின் செயலாளர் சனத் பாலசூரிய ஜேர்மனிக்கு சென்றார். போத்தல ஜயந்த கடுமையாக தாக்கப்பட்டு முல்லேரியா வைத்தியசாலைக்கு முன்பாக வீசப்பட்டார். அதன் பின்னர் போத்தல ஜயந்த அமெரிக்காவுக்குச் சென்றார்.

2009 ஆம் ஆண்டு காலப்பகுதியில் சிரச தொலைக்காட்சியில் பிரதானியாக நான் பதவி வகித்த போது புலனாய்வு பிரிவின் பிரதானியான சுரேஷ் சலேவுடன் ஒன்றிணைந்து செயற்பட்ட ஹந்தர விதாரன என்பவர் யுத்தம் தொடர்பான செய்திகளை ஒளிபரப்பு செய்வதை தவிர்க்குமாறு பலமுறை வலிறுத்தினார். நான் முடியாது அதற்கான அதிகாரம் எனக்கில்லைஎன்று குறிப்பிட்டேன். அதன் பின்னர் சிரச தொலைக்காட்சி நிறுவனத்தின்மீது குண்டுத்தாக்குதல் நடத்தப்பட்டது. இவ்வாறான பின்னணியில் தான் ராஜபக்ஷர்களின் அரசியல் வரலாறு காணப்படுகிறது.

சிரச தொலைக்காட்சி மீது தாக்குதல் நடத்தப்பட்டதன் பின்னர் சிரேஷ்ட ஊடகவியலாளரும், சன்டே லீடர் பத்திரிகையின் ஆசிரியருமான லசந்த விக்கிரமதுங்க படுகொலை செய்யப்பட்டார். இவ்வாறான சூழலில் கொழும்பு மாநாக சபையின் முன்னாள் மேயரின் வீட்டில் இடம்பெற்ற ஒரு சந்திப்பின் போது அரச புலனாய்வு பிரிவின் அதிகாரி ஒருவர் என்னிடம் 'உங்களை 24 மணிநேரத்துக்குள் கொலை செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஆகவே உயிரை பாதுகாத்துக்கொள்ளுங்கள்'. - என்றார்.

அதன் பின்னர் அரசாங்கத்தின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவரின் தலையீட்டுடன் 'நான் பாதுகாக்கப்பட்டேன். ஆகவே இதுவே ராஜபக்ஷர்களின் வரலாறு. பொதுஜன பெரமுனவின் புதிய உறுப்பினர்களுக்கு இவை தெரியாது. யுத்தம் முடிவடைந்ததன் பின்னர் முஸ்லிம் சமூகத்தினர் மீதான வன்முறைகட்டவிழ்த்துவிடப்படும்' என்று குறிப்பிட்டோம். அளுத்கமை சம்பவத்தில் இருந்து முஸ்லிம்கள் மீது தாக்குதல்கள் முன்னெடுக்கப்பட்டன. ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதலின் பின்னர் முஸ்லிம் சமூகத்தினர் கௌரவமாக வாழும் சூழல் மறுக்கப்பட்டது. இதற்கு ராஜபக்ஷர்கள் பொறுப்புக்கூற வேண்டும். ஏனெனில். ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதலை கொண்டு ராஜபக்ஷர்கள்தான் ஆட்சிக்குவந்தார்கள்.

ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட வெளிநாட்டவர்கள் நிச்சயம் சர்வதேச நீதிமன்றத்தை நாடுவார்கள். செனல் 4 வெளியிட்டுள்ள காணொளியை அடிப்படையாகக் கொண்டு அடுத்தகட்ட நடவடிக்கைகள் நிச்சயம் எடுக்கப்பட வேண்டும். - என்றார். (05)

# மன்னாரில் ஹோட்டல் ஒன்றின் குளியலறை உபகரணங்களைத் திருடிய இருவர் கைது

## 5 லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் மீட்பு



மன்னார் - தலைமன்னார் பிரதான வீதியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு வரும் ஹோட்டல் ஒன்றின் குளியல் அறைகளில் இருந்து திருடப்பட்ட ஒரு தொகுதி குளியலறை உபகரணங்களுடன் 2 சந்தேக நபர்கள் செவ்வாய்க்கிழமை மன்னார் பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களிடமிருந்து சுமார் 5 லட்சம் ரூபா பெறுமதியான குளியலறை உபகரணங்கள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் கைது செய்யப்பட்டவர்கள் மன்னார் தாழ்வுபாடு மற்றும் புத்தளம் பகுதிகளைச் சேர்ந்த 23 மற்றும் 58 வயதுடையவர்கள் என மன்னார் பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவினர் தெரிவித்துள்ளனர். மன்னார்-தலைமன்னார் பிரதான வீதியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு வரும் ஹோட்டல் ஒன்றில் குளியலறை உபகரணங்கள் திருடப்பட்டுள்ளன என அதன் உரிமையாளர் திங்கட்கிழமை மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்தனர்.

அதனையடுத்து, மன்னார் பொலிஸாரின் துரித நடவடிக்கைகளுக்கு அமைவாக செவ்வாய்க்கிழமை குறித்த இரு சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டதோடு, அவர்கள் பதுக்கி வைத்திருந்த சுமார் 5 லட்சம் ரூபா பெறுமதியான குளியலறை உபகரணங்கள் மீட்கப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் இருவரும் மன்னார் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர்.

விசாரணைகளின் பின் சந்தேக நபர்கள் மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர் என மன்னார் பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

மன்னார் மாவட்டத்தில் அண்மைக்காலமாக இவ்வாறான பல்வேறு திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (05)

# மருத்துவரான தனது மகள் சேவைக்குத் திரும்பமாட்டார் வைத்தியசாலைக்கு வட்ஸ்அப் தகவல் அனுப்பிய தந்தை

எம்பிலிபிட்டிய மாவட்ட பொது வைத்தியசாலையின் ஒரேயொரு மயக்க மருந்து நிபுணர் கடந்த வெள்ளிக்கிழமை முதல் பணிக்கு சமுகமளிக்காததால் வைத்தியசாலையின் சத்திர சிகிச்சை பிரிவு மற்றும் அதிதீவிர சிகிச்சைப் பிரிவின் பணிகள் பாதிக்கப்பட்டுள்ளன என வைத்தியசாலை அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

குறித்த மருத்துவரின் தந்தை என கூறிக்கொள்ளும் நபர் ஒருவர், வட்ஸ்அப் ஊடாக வைத்தியசாலை அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்துள்ள தகவலில் தனது மகள் மீண்டும் பணிக்கு திரும்பப் போவதில்லை என அறிவித்துள்ளார் எனவும் வைத்தியசாலை பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

மயக்க மருந்து நிபுணர் பணிக்கு வராததால் இரண்டு பிரதான சத்திர சிகிச்சை பிரிவுகள் மற்றும் அதிதீவிர சிகிச்சைப் பிரிவு ஆகியவற்றின் நடவடிக்கைகள் முற்றாக ஸ்தம்பிதமடைந்துள்ளன எனவும் வைத்தியசாலை அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில் தற்போது எம்பிலிபிட்டிய மாவட்ட பொது வைத்தியசாலைக்கு இரண்டு மயக்க மருந்து நிபுணர்களின் சேவை தேவை என வைத்தியசாலை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (05)

# டுபாயில் தொழில் எனக்கூறி பண மோசடி குருணாகலில் தம்பதி உட்பட மூவர் கைது

போலி வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தை நடத்தி வந்தார்கள் என்ற குற்றச்சாட்டில், வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் விசேட புலனாய்வு பிரிவினரால் தம்பதியரும் மற்றுமொரு நபரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

டுபாயில் தொழில் வழங்குவதாக ஒருவரிடம் இருந்து தலா 7,60,000 ரூபா பெற்றுக்கொண்டு வாக்குறுதியளித்தபடி, தொழில் வழங்கவில்லை என இருவர் செய்த முறைப்பாட்டின் அடிப்படையில் குருணாகல் பிரதேசத்தில் இயங்கிவரும் நிறுவனம் ஒன்று சோதனையிடப்பட்டுள்ளது.

இதன்போது, பணியகத்தின் செல்லுபடியாகும் அனுமதிப்பத்திரமின்றி சட்ட விரோதமான முறையில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தை நடத்தியமை மற்றும் வெளிநாட்டு வேலைகளுக்கு ஆட்சேர்ப்பு செய்தமை ஆகிய இரண்டு குற்றச்சாட்டுகளின் கீழ் கணவனையும் மனைவியையும் அவர்களது உறவினர் ஒருவரையும் அதிகாரிகள் அங்கு கைது செய்துள்ளனர்.

இந்தச் சோதனையின்போது, அதிகாரிகள் 4 கடவுச் சீட்டுக்கள் மற்றும் வெளிநாட்டு தொழில் வழங்குவது தொடர்பான பல ஆவணங்களையும் கண்டுபிடித்தனர். (05)

# சனல் 4 காணொளியை அனைவரும் பார்க்குக

## அகிம்சா விக்கிரமதுங்க கோரிக்கை

சனல் 4 வெளியிட்டுள்ள உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்த காணொளியை அனைத்து இலங்கையர்களும் பார்க்கவேண்டும் என படுகொலை செய்யப்பட்ட பத்திரிகையாளர் லசந்த விக்கிரமதுங்கவின் மகள் அகிம்சா தெரிவித்துள்ளார். ருவிட்டர் பதிவில் அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்த உண்மைகளை அம்பலப்படுத்தும் சனல்4 இன் வீடியோவை பார்த்த பின்னர் ஏற்பட்ட உணர்வுகளை வர்ணிக்க வார்த்தைகள் இல்லை.

பலவருடங்களாக இந்தத் தாக்குதலிற்கும் கோட்டாபய ராஜபக்ஷவிற்கும் தொடர்பிருக்கவேண்டும் என நான் கருதிவந்துள்ளேன்.

இது அனைத்;து இலங்கையர்களும் பார்க்கவேண்டிய மிக முக்கியமான படமாகும் என அவர் தெரிவித்துள்ளார். (05)



# யுவதியை வலுக்கட்டாயமாக அழைக்க முயற்சித்தவர் தாக்கப்பட்டுக் கொலை

பட்டதாரி யுவதி ஒருவரை வலுக்கட்டாயமாக அழைத்துச் செல்ல முயற்சித்தார் என கூறப்படும் மூன்று பிள்ளைகளின் தந்தை ஒருவர் அடித்துக் கொல்லப்பட்டுள்ளார் என ரொட்டம்ப பொலிஸார் தெரிவிக்கின்றனர்.


இரத்தினபுரி, கஹவத்த பிரதேசத்தில் வசிக்கும் 38 வயதுடைய நபரே உயிரிழந்துள்ளார். உயிரிழந்த நபர் குறித்த யுவதியுடன் சிறிது காலமாக காதல் உறவில் இருந்துள்ளார். இந்நிலையில், அந்த யுவதி அவருடனான உறவைநிறுத்தியதால், காதலன் தொலைபேசியில் திட்டி மிரட்டியுள்ளார். இந்தச் சம்பவத்துக்கு முன்னைய நாளும் யுவதியை மிரட்டியதால் அவரின் பெற்றோரும் இது குறித்து பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு வழங்கியுள்ளனர்.

இந்நிலையில், திங்கட்கிழமை அந்த யுவதியின் வீட்டுக்கு வந்த நபர், குறித்த யுவதியை பலாத்காரமாக அழைத்துச் செல்ல முயற்பட்டபோதே அங்கிருந்தவர்களால் தாக்கப்பட்டு உயிரிழந்துள்ளமை விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. (05)

# ட்ராக்டர்- மோ. சைக்கிள் மோதி விபத்து ஒட்டுசுட்டானில் இரு இளைஞர்கள் சாவு


## இருவர் கைது











முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஒட்டுசுட்டான், மாங்குளம் வீதியில் 21 ஆவது கிலோ மீற்றர் கல்லுக்கு அருகில், வீதியில் நின்ற உழவு இயந்திரத்தின் மீது மோட்டார் சைக்கிள் வேகமாக வந்து மோதியதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இரு இளைஞர்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். இந்த விபத்து செவ்வாய்க்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

முள்ளியவளை, பொன்னக பகுதிகளைச் சேர்ந்த 23 மற்றும் 24 வயதுடைய இரு இளைஞர்களே இந்த விபத்தில் உயிரிழந்துள்ளனர்.

வீதியில் நெல்லினை காயப்போட்டு, அதனை ஏற்றும் பணிகளுக்காக உழவு இயந்திரம் நிறுத்தப்பட்டிருந்தபோதே மோட்டார் சைக்கிள் மோதி இந்த விபத்து நேர்ந்துள்ளதன் அடிப்படையில், உழவு இயந்திரத்தின் உரிமையாளர் உட்பட இருவர் ஒட்டுசுட்டான் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

மேலதிக விசாரணைகளை ஒட்டுசுட்டான் பொலிஸார் மேற்கொண்டு வருகிறார்கள்.

இந்நிலையில், உயிரிழந்த இரு இளைஞர்களின் சடலங்களும் ஒட்டுசுட்டான் பொலிஸாரால் மீட்கப்பட்டு முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளன. (05)


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 990/=
Chikne Fried Rice with Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 07.09.2023இல் வெளியிடப்பெற்றது.